சரஸ் சாரல்
ஏப்ரல் 2017 ₹ 15
ர் குரல்!
Saras Saaral

VADIVEL



வெற்றிக்கு பின்னால் உள்ள சவால்கள்!

தமிழின் மகத்துவமும்! கோலிவுட்டும்!



மடை திறந்த வெள்ளமாய் முன்னணி இடத்தை பிடித்து வரும் மா.கா.பா!

VADIVEL

சரஸ் சாரல்

உங்கள் குரல்!

நிறுவன ஆசிரியர்
விஷ்வநாத்
(1917- 2002)

ஏப்ரல் 2017 சாரல் 233
Saras Saral Tamil April 2017

பதிப்பாளர், ஆசிரியர் : பரேஷ் நாத்
தலைமை அலுவலகம்:
டெல்லி பிரஸ் பவன்,
E-3, ஜண்டேவாலா எஸ்டேட், ராணி ஜான்சி ரோடு, புது டெல்லி-110 055.

மண்டல அலுவலகம் மற்றும் எடிட்டோரியல்: டெல்லி பிரஸ், சிசன்ஸ் காம்ப்ளக்ஸ் முதல் மாடி, 2/92, மாண்டியத் சாலை, எழும்பூர், சென்னை-600 008,

கிளைகள்:

- **அகமதாபாத்** 503, நாராயண் சேம்பர்ஸ், ஆஸ்ரம் ரோடு - 380009
- **பெங்களூர்** ஜி-3, எச்விஎஸ் கோர்ட், 21, கன்னிங்ஹாம் ரோடு-560052.
- **போபால்** 12-B, மகாராணா பிரதாப் நகர், மண்டலம் -1, போபால் - 462011
- **மும்பை** (ஆசிரியர் குழு அலுவலகம்) B-3 வடாலர் உத்யோக் பவன், நய்கான்வ் கிராஸ் ரோடு, வடாலா-400031. (விளம்பரப் பிரிவு அலுவலகம்) A-4, ஸ்ரீராம் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், வடாலா-400031
- **கொல்கத்தா** போத்தர் பாய்ண்ட், 3வது மாடி, 113 பார்க் தெரு - 700016.
- **கொச்சின்** G -7 பயனீர் டவர்ஸ், எண்:1 மெரின் ட்ரைவ் - 682031.
- **லக்னோ** B-G/ 3,4, சாப்ரு மார்க் - 226001.
- **பாட்னா** 111, ஏசியானா டவர்ஸ், எக்ஸிபிஷன் ரோடு - 800001.
- **செகந்தராபாத்** 122, ஷெனாய் ட்ரேடு சென்டர் 116 - பார்க் லேன் - 500003.
- **ஜெய்ப்பூர்** கிதாஞ்சலி டவர், எண்:114, டாக்டர் வியாஸ் மருத்துவ மனை எதிரில், அஜ்மீர் ரோடு - 302006.



சரஸ் சாரல் கதைகளில் வரும் பெயர்கள், சம்பவங்கள், இடங்கள் அனைத்தும் கற்பனையே, படைப்புகளை அனுப்ப விரும்பும் எழுத்தாளர்கள் உரிய தபால்தலை ஒட்டிய சுயவிலாசமிட்ட கவரையும் இணைக்கவேண்டும். படைப்புகளை திருத்த, திருப்பியனுப்ப ஆசிரியருக்கு உரிமை உண்டு.



டெல்லி பிரஸ் பத்ர பிரகாஷன் (பி)லிட். க்காக, பதிப்பாளர் மற்றும் அச்சிடுபவர், **பரேஷ் நாத்** சார்பில் டெல்லி பிரஸ் சமாச்சார் பத்ர(பி)லிட்., A-36, சாகிபாபாத், காசியாபாத் மற்றும் டெல்லி பிரஸ் E-3, ஜண்டேவாலா எஸ்டேட், புது டெல்லியில் அச்சிடப்பட்டு மற்றும் E-3, ஜண்டேவாலா எஸ்டேட், புது டெல்லியிலிருந்து வெளியாகிறது.



© டெல்லி பிரஸ் பத்ர பிரகாஷன் (பி) லிட். புது டெல்லி-110055 அனுமதியின்றி கதைகளையோ வேறு படைப்புகளையோ பிறர் பயன்படுத்தக்கூடாது.

COPYRIGHT NOTICE
© Delhi Press Patra Prakashan (P) Ltd., New Delhi-110055, India. No article, story, photo or any other matter can be reproduced from this magazine without permission. THIS COPY IS SOLD ON THE CONDITION THAT JURISDICTION FOR ALL DISPUTES CONCERNING SALE, SUBSCRIPTION AND PUBLISHED MATTER WILL BE COURTS/FORUMS/TRIBUNALS AT DELHI



வெளியீட்டாளர்:
டெல்லி பிரகாஷன் வித்ரன் (பி) லிமிட்டெட்.
E-3, ஜண்டேவாலா எஸ்டேட், ராணி ஜான்சி ரோடு, புது டெல்லி - 110 055

Rates : Inland : One copy Rs. 15.
One year Rs.148, Two years Rs. 270.

**விலை ரூ.15 மட்டுமே!**


## நெத்தியடி

நரேந்திர மோடி மீண்டும் ஒருமுறை, "1971-ல் இந்திரா காந்தி செய்தது போல் ஒரு அற்புதத்தை நிகழ்த்தி விட்டார்." என்று தான் கூற வேண்டும். ஏனெனில் பாஜக சமீபத்தில் நடந்த உ.பி, உத்தரகாண்ட் சட்டசபை தேர்தலில் அமோக வெற்றி பெற்று விட்டதே. தனி ஆளாக நின்று இதற்காக பிரச்சாரம் செய்தார் மோடி. இப்படி உபியில் பாஜகவுக்கு கிடைத்த வெற்றி என்பது, 'உபி கிட்டதட்ட சாதி என்ற சங்கிலி முடிச்சிலிருந்து விடுபட்டு விட்டது.' என்பதையே



எடுத்துக் காட்டுகிறது. இந்த தேர்தல்களில் பாஜக வறுமை குறித்தோ, மண்டல் கமிஷன் குறித்தோ, அம்பேத்கர் குறித்தோ எதுவும் பேசவில்லை. ஆனால் அது வெற்றி பெற்று விட்டது.

உபியில் வறுமை நிகழக் காரணம், அந்த மாநிலத்தில் உள்ள சாதி என்ற உணர்வு தான். ஆம், அங்குள்ள மக்கள் பல நூற்றுக்கணக்கான சாதிகளாக பிரிந்து கிடக்கின்றனர். பகுஜன் சமாஜ் கட்சி இதுவரை தலித்துகளை முன்னிலைப்படுத்தி அதிகாரத்தை பெற்றுள்ளது. ஆனால் தலித்துகளின் நிலை என்னவோ அங்கு அப்படியே தான் உள்ளது. பிறகு யாதவாக்கள் ஆட்சி அமைத்தனர். ஆனால் அதன் பிறகும் யாதவர்களின் நிலை அப்படியே தான் இருந்தது. அதற்குப் பிறகு வந்த காங்கிரஸிடமும் இதே போக்கு தான் இருந்தது. இப்போது பாஜக ராமர் கோவில் என்று எதுவும் கூறாமலே வெற்றி பெற்றுள்ளது.

'பாஜக அரசு கடந்த அரசுகளை விட சற்று மாறுபட்டது.' என்று தாங்கள் சிந்திக்கலாம். எது எப்படியோ ஒவ்வொரு அரசும் கிட்டதட்ட ஒரே மாதிரியான வேலையை தான் செய்கிறது. 'ஏதாவது செய்து ஆட்சியை பிடிக்க வேண்டும்.' என்பதே அதன் நோக்கமாக உள்ளது. ஆம், இப்போது கிட்டதட்ட பாஜக மெதுமெதுவாக காங்கிரஸின் இடத்தை பிடிக்க ஆரம்பித்து விட்டது. அதாவது அதுவும் காங்கிரஸ் போல செயல்பட ஆரம்பித்து விட்டது. இவ்வாறு பாஜகவின் புதிய நிறம் என்பது, ஒவ்வொரு சாதியுடனும் மெதுமெதுவாக இணைக்கப்பட்டு வருவதால் தான், அதற்கு உபியில் இந்த வெற்றி கிடைத்துள்ளது.

நடந்து முடிந்த இந்த சட்டசபை தேர்தல் முடிவுகளின் வெற்றி என்பது, 'இந்த வெற்றி வாய்ப்பு என்பது ஒரு கட்சிக்கு மட்டுமே உரித்தானது அல்ல.' என்றே காட்டுகிறது. இந்த தேர்தல்களில் அகிலேஷ் யாதவ் மற்றும் ராகுல் காந்தி தங்கள் கடின உழைப்பை போட்டனர். இருப்பினும் நரேந்திர மோடியின் செயல்கள் பெரும் பலனை கொடுத்து விட்டன. இந்த தேர்தல்களின் வெற்றி என்பது, 'பொறுப்பும் அதிமாகி உள்ளது.' என்று பொருளாகும். இந்த சட்டசபை தேர்தல் வெற்றிக்குப் பிறகு பாஜக மேலும் செயலாற்ற வேண்டும். மக்களும் இதை தான் பாஜகவிடமிருந்து எதிர்பார்க்கிறார்கள்.

★★★

அரியானாவின் குஸ்தி வீராங்கனையான கீதா ஃபோகட் பற்றி தான் சமீபத்தில் அமீர் கான் நடித்த 'தங்கல்' படம் சித்தரித்திருந்தது. 2010-ல் நடந்த காமன்வெல்த் விளையாட்டுகளில் தங்கப்பதக்கம் வென்ற போது கூட அவருக்கு இப்படி பெயர் கிடைக்கவில்லை, மாறாக 'தங்கல்' படம் வெளியான பிறகு தான் இவர் மிகவும் பிரபலமானார் என்பது குறிப்பிடத்தக்கது. ஆம், 'தங்கல்' படம் வெற்றிக்குப் பிறகு கீதா ஒவ்வொரு பெண்ணுக்கும் ரோல் மாடலாக ஆகியுள்ளார். இப்படி சில சினிமாக்கள் சமுதாயத்திலும் புரட்சிகரமான மாற்றத்தை உருவாக்கி விடுகிறது. இந்த படத்தில் நடித்த பபிதாவும் இப்போது பிரபலமாகி விட்டார் என்பது கவனிக்க வேண்டிய விஷயமாகும்.

அரியானாவில் ஒரு தந்தை தன் இரண்டு மகள்களை இப்போது குஸ்தியில் திறமைசாலிகளாக மாற்ற உறுதிமொழி எடுத்துக் கொண்டிருக்கிறார் என்பது நிஜமாகவே நல்ல விஷயம் தான். இந்த நாட்டில் பல நூற்றாண்டுகளாக, 'பெண்கள் என்றால் சுமை' என்ற நிலை உள்ளது. ஆனால் இது போன்ற சினிமாக்களால் அந்த நிலை மாறி வருகிறது. ஆம் 'தங்கல்' போன்ற சமூக விழிப்புணர்வு படங்களால், இப்போது சமுதாயத்தில் பெண் குழந்தைகளுக்கு உரிய அங்கீகாரம் கிடைத்து வருகிறது.



இந்த மாற்றம் என்பது இன்னும் அதிகம் தென்பட வேண்டியது அவசியம். நம் மத ரீதியான சடங்குகளும் பெண்களை கட்டிப்போட்டு வைத்துள்ளன. இன்றுவரை சில கிராமங்களில் பெண்கள் பிள்ளை பெறும் வெறும் ஒரு மெஷினாக மட்டுமே பார்க்கப்படுகிறார்கள். ஆனால் பெண்களுக்கு தங்களுக்குரிய அங்கீகாரம் கிடைத்தால், நம் நாட்டின் பொருளாதார நிலை இன்னும் மேம்படும். 'பெண்கள் என்பவர்கள் ஆண்களுக்கு அடிமை அல்ல' என்ற சிந்தனை மேலோங்க வேண்டும். அப்போது தான் இந்த சமுதாயத்தில் உள்ள பெண் அடிமைத்தனம் என்பது முற்றிலும் மறையும். எப்படி இந்த படம் மூலம் மாறியதோ, அது போல. ●

# மடை திறந்த வெள்ளமாய் முன்னணி இடத்தை பிடித்து வரும் மா.கா.பா!

டி.மகாலட்சுமி

மா.கா.பா.ஆனந்த் காம்பியராக தனது கேரியரைத் தொடங்கி, இப்போது ஒரு ஹீரோவாக கோலிவுட்டில் வலம் வந்து கொண்டிருக்கிறார். 'அயராத உழைப்பு என்பது ஒருவரை எப்போதும், அவரை உயரத்துக்கு கொண்டு செல்லும்.' என்பதற்கு சிவகார்த்திகேயனைப் போல, இவரும் ஒரு உதாரணம் என்பதை யாராலும் மறுப்பதற்கு இல்லை. காரணம் சிவாவும் இவ்வாறு கஷ்டப்பட்டு உயர்ந்தவர் அல்லவா? மிகவும் எளிமையான சுபாவம் கொண்ட மா.கா.பா இப்போது வரை பல டிவி ஷோக்களுக்கு, அதிலும் குறிப்பாக பல பிரபல ரியாலிட்டி ஷோக்களுக்கு காம்பியரும் செய்து வருகிறார். ஆம், இந்த இதழில் நாம் மா.கா.பா.ஆனந்த் பற்றி தான் பார்க்க இருக்கிறோம்:




## இவரது பூர்வீகம்

மா.கா.பா.ஆனந்த் பிப்ரவரி 26, 1986-ல் புதுச்சேரியில் பிறந்தவர் ஆவார். ரேடியோ ஜாக்கி, வீடியோ ஜாக்கியாக தனது கேரியரைத் தொடங்கினார் இவர். அதுவும் 2014-ல் தனது இந்த கேரியரைத் தொடங்கிய இவர், ஹீரோவான பிறகும் இப்போது வரை இந்த தொழிலை விடவில்லை. இவர் மனைவி பெயர் சூசன் ஜார்ஜ் என்பதாகும். இந்த தம்பதிக்கு 6 வயதில் ஒரு அழகான பெண் குழந்தையும், 10 மாத ஆண் குழந்தையும் உண்டு. மா.கா.பாவின் பெற்றோர் பெயர் தெய்வநாயகம் மற்றும் குமுதம் ஆகும். இவர் தம்பி பெயர் அசோக் மா.கா.பா. என்பதாகும். பாண்டிச்சேரியில் பள்ளிப் படிப்பையும், எம்.பி.ஏ-வும்

> "என்ன தான் ஹீரோ ஆகி விட்டாலும், தான் பிரபலமாக மாறுவதற்கு காரணமாய் இருந்த, ரேடியோ ஜாக்கி, வீடியோ ஜாக்கி தொழிலை மறக்காமல், இதுவரை தான் ஆரம்பம் முதல் பணிபுரிந்து வந்த பிரபல டிவி சேனலின் வீஜேவாக வலம் வந்து கொண்டிருக்கிறார் இவர். 'தொழில் மீதான பற்று' என்று இதைத் தான் கூறுவார்கள்."

முடித்துள்ளார் இவர். முதலில் கோவையில் ஒரு தனியார் எஃப்எம்-ல் ஆர்.ஜே-ஆக சேர்ந்தார் இவர்.

இவருக்கு இவர் அப்பா தான் ரோல் மாடல் ஆவாராம். 'வானவராயன், வல்லவராயன்' படத்தின் மூலம் கோலிவுட்டில் அறிமுகமான இவர், நடிப்பில் 'நவரச திலகம்' ஆகி பிறகு, 'அட்டி', 'கடலை' என்று இவர் ஹீரோவாக நடித்த பல படங்கள் ரிலீசாகி விட்டன. இவற்றில் எல்லாம் மா.கா.பா தான் கலகல ஹீரோ ஆவார். அடுத்து இவர் 'வெற்றிவேல்', 'கிடாரி' போன்ற படங்களில் நடித்திருந்த நிகிலா விமலுடன் 'பஞ்சுமிட்டாய்' என்ற படத்தில் நடித்துள்ளார். இதில் சென்ராயன் மற்றும் பலர் நடித்துள்ளனர். இந்த படத்துக்கு இசை டி.இமான் ஆகும். எஸ்.பி.மோகன் டைரக்ட் செய்துள்ள இந்த படத்தை, எஸ்.பி.மோகன் எழுத, மகேஷ்.கே.தேவ் ஒளிப்பதிவு செய்துள்ளார். இதில் பாண்டியராஜன், பாண்டு என்று ஒரு காமெடி பட்டாளமே நடித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. அடுத்து 'மாணிக்' என்ற படத்தில் மா.கா.பா. ஆனந்த் நடித்து வருகிறார். மார்டின் டைரக்ட் செய்து வரும் இந்த படத்துக்கு, இசை தரண் குமார் ஆகும். இந்த படத்துக்கு ஒளிப்பதிவு







செய்கிறார் எம்.கே.பழனி குமார். இந்த படத்தில் மா.கா.பாவுக்கு ஜோடி சுஜா குமார் ஆகும். இந்த படத்திலும் யோகி பாபு இருப்பதால், "காமெடிக்கு குறையே இருக்காது" என்று அடித்து கூறலாம்.

"இவரை தனது உடன் பிறவா தம்பி." என்று நடிகர் கிருஷ்ணா புகழாரம் சூட்டியுயிருக்கிறார். காரணம் 'வானவராயன், வல்லவராயன்' படத்தில் இவர்களது காம்போ நடிப்பு மட்டுமல்ல, காமெடி கலாட்டாவும் அனைவரையும் கவர்ந்தது தான்.

"தனக்கு லைட் ஹார்டட் ரோல்களில் மட்டுமே நடிக்க வரும்." என்று கூறியுள்ள மா.கா.பா, வருங்காலத்தில் ஆக்ஷன் ரோல்களில் கலக்கினாலும் எதுவும் சொல்வதற்கில்லை. காரணம் பல ஹீரோக்கள் தாங்கள் நடிக்க வந்த ஆரம்ப காலகட்டத்தில் இப்படி சொல்லி விட்டு, இப்போது ஆக்ஷன், டான்ஸ் என்று அதிரடியாக கலக்கி வருகின்றனரே.

## இவர் வாங்கியுள்ள விருதுகள்

பல விருது வழங்கும் நிகழ்ச்சிகளுக்கு காம்பியர் செய்துள்ள இவர், தான் பணிபுரிந்த டிவி சேனலின் 2015-ம் ஆண்டிற்கான சேனல் அவார்டையும் பெற்றார் என்பது தான் குறிப்பிடத்தது. "அவர் இன்னும் பல விருதுகளை வாங்குவார்." என்று உறுதியாக கூறலாம். காரணம் அவர் சினிமா மீது கொண்ட பற்று என்பது அந்த அளவுக்கு அதிகம் இருப்பது தான்.

மேலும் இவர் அடுத்து நடித்துள்ள 'மாணிக்' படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டரில், இவர் 'பாட்ஷா' படத்தில் ரஜினிகாந்த் நடித்த கெட்அப் ஆன 'மாணிக் பாட்ஷா' ரேஞ்சுக்கு இருப்பது தான். அதனால் இந்த படத்தின் எதிர்பார்ப்பு அதிகமாகி உள்ளது. மேலும் 'கபாலி' படத்தில் ரஜினிகாந்த் வந்த கெட்அப்பில் சில மாற்றங்கள் செய்யப்பட்டு, மா.கா.பாவின் ஸ்டில் ஒன்று ஒரு ப்ளாக்கில் வெளியிடப்பட்டு, 'இந்த நடிகர் யார்?' என்று ஒரு க்யூரியாசிட்டியை ஏற்படுத்தியது என்பது குறிப்பிடத்தக்கது.





இப்படி மா.கா.பா பற்றி சொல்லிக் கொண்டே போகலாம். அடுத்து கோலிவுட்டில் வளர்ந்து வரும் ஹீரோக்கள் பட்டியலில் இப்போது இருக்கும் மா.கா.பா, இன்னும் சில ஆண்டுகளில் சிவகார்த்திகேயனுக்கு அடுத்தபடியாக, ஒரு நிலையான ஹீரோ என்ற இடத்தை கட்டாயம் பிடித்து விடுவார். ●



# தமிழின் மகத்துவமும்! கோலிவுட்டும்!

டி.சுபா'சினி'

தமிழ் புத்தாண்டு வர இருக்கிறது. தமிழின் மகத்துவத்தை உணர்த்தும் வகையில், இதுவரை பல்வேறு தமிழ் திரைப்படங்கள் வெளிவந்து விட்டன. அதிலும் குறிப்பாக காவியங்கள் கூட தமிழ் திரைப்படங்களாகி, ஓடி, அதிக வசூலை வாரிக் குவித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. அதற்கு உதாரணமாக பல்வேறு படங்களை கூறலாம்.

'பூம்புகார்', 'திருஞானசம்பந்தர்', கப்பலோட்டிய தமிழன்', 'பாரதி', 'வீர பாண்டிய கட்டபொம்மன்' இப்படி பல. இதில் தமிழின் மகத்துவம் மட்டுமல்ல, மாறாக பிரபல சுதந்திர போராட்ட வீரர்களின் வாழ்க்கை கதையைக் கொண்ட பல தமிழ் படங்கள் வெளிவந்து விட்டன. இவை வெற்றி பெற்றன என்பதற்கு பல உதராணங்களை கூறலாம். அதில் உதாரணமாய், 'நமக்கு பாரதியார், வ.உ.சி, வீரபாண்டிய கட்டபொம்மன் என பல்வேறு சுதந்திர போராட்ட வீரர்களை நினைக்கும் போதே நமக்கு அதில் நடித்த சிவாஜி போன்ற நடிகர்கள் முதலில் நினைவுக்கு வருவது.' போன்றவற்றை கூறலாம். நம் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நடித்த 'திருவிளையாடல்' போன்ற படங்களை நம்மால் இன்றும் மறக்க முடியவில்லையே. அதில் வரும் பாடல்களையும், நாம் எப்போது டிவியில் போட்டாலும் முணுமுணுக்கிறோமே.

'பூம்புகார்' படத்தின் கலைஞர் வசனங்களை எஸ்.எஸ்.ஆர், விஜயகுமாரி, கே.பி.சுந்தாரம்பாள் போன்றவர்கள் பேசுவதைக் கேட்பதே காதில் தேன் வந்து பாய்ந்த உணர்வை, இப்போதும் எத்தனை முறை டிவியில் பார்த்தாலும் நமக்கு அந்த ஆனந்தம் கிடைக்கிறதே. சிலப்பதிகாரம் கதையைக் கொண்ட இந்த படத்தில், கண்ணகியாகவே விஜயகுமாரி அதில் வாழ்ந்திருப்பார். இப்போது தானே சிஜி, கூகுள், அது, இது எல்லாம். அந்த காலத்தில் இத்தகைய ஒரு காவிய படைப்பை மக்களிடம் கொண்டு சேர்க்க அந்த டைரக்டர் மட்டுமல்லாமல், அந்த படக்குழுவினர் எந்த அளவு சிரமப்பட்டிருப்பர்? ஆடை, அலங்காரம், ஆர்ட் டைரக்ஷன், நகை, நட்டுகள் என்று எல்லாவற்றையும் அவர்கள் பார்த்து பார்த்து செய்ததால் தான், 'பிளாக் அண்டு ஒயிட்' என்றாலும், நமக்கு அந்த படங்கள் ஏதோ ஈஸ்ட்மேன் கலரில் பார்த்தது போன்ற மனநிறைவைத் தந்தன, தருகின்றன, இனியும் தரும்.

*10 பக்க தூய தமிழ்*

**"இது வரை கோலிவுட்டில் தமிழின் மகத்துவத்தை உணர்த்தும் விதமாக பலவேறு திரைப்படங்கள் வெளிவந்துள்ளன. இது போன்ற படங்கள் இனியும் வரும். காரணம் யாருக்குமே தாய் மொழி என்ற ஒன்றின் மீது அதிக பற்றுதல் இருக்கத் தானே செய்யும்."**

வசனங்களை, 'அந்த படத்தின் திரை கலைஞர்கள் எப்படி பேசியிருப்பர்?' என்று கொஞ்சம் நினைத்துப் பாருங்கள். அதுவும் அச்சு அசலாக, சற்றும் பிசகாமல், அதுவும் சிறந்த தமிழ் உச்சரிப்போடு. அதே போல் அந்த காலத்தில் வந்த தமிழ் பாடல்கள் எவ்வளவு உவமைகளைக் கொண்டு, நமக்கு தமிழை இன்றளவும் சொல்லாமல் சொல்லித் தருகின்றன.

ஆனால் இப்போது வரும் சில தமிழ் சினிமா பாடல்களைக் கேளுங்கள், அதில் வரும் சொற்கள் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றுவது போல அல்லவா உள்ளது. அதிலும் சென்னை தமிழ் வார்த்தைகளுடன் வரும் பாடல்களைப் பற்றி சொல்லவே வேண்டாம். அதற்காக சென்னை தமிழ் மட்டம் என்று நான் சொல்ல வரவில்லை. மாறாக எந்த வட்டார வழக்கு மொழிக் கொண்டு பாடல் வரிகளை எழுதினாலும், அவை நம் தூய தமிழை கெடுக்காமல் இருந்தால் சரி.




இதே போல் இதுவரை தமிழின் மகத்துவத்தைப் பறைசாற்றியும் பல சினிமா பாடல்கள் வெளிவந்துள்ளன. இதற்கு உதாரணத்தை நீங்கள் கூறுவீர்கள். மகா காவியங்களை ஒரு தமிழ் சினிமாவாக கொண்டு வந்த அந்த காலகட்டம் போல், இப்போது சில தமிழ் சீரியல்கள் வருவது நல்ல விஷயம் ஆகும்.

இதே போல் டோலிவுட்டில், 'பாகுபலி' படத்தை எடுத்த டைரக்டர் ராஜமௌலி அடுத்து 'மகாபாரதம்' கதையை பல பாகங்களில் படமாக எடுக்க இருப்பதாக கூறப்படுகிறது. இதில் அமீர் கான் கிருஷ்ணராக நடிக்க இருக்கிறாராம். மேலும் பல பிரபல நடிகர்களும் இதில் நடிக்க உள்ளனராம். இதே போல் தமிழின் மகத்துவத்தை உணர்த்தும் வேறு ஒரு தமிழ் படத்துக்கும் பிரபல நடிகர், நடிகைகள் தூய தமிழில் பேச பயிற்சி எடுத்து வருவதாக கூறப்படுகிறது.

'தங்கிலீஷ்' என்று நாம் மொபைலில் பூந்து விளையாடினாலும், 'தமிழ்' என்ற ஒன்றின் மீது நமக்கு எவ்வளவு ஈர்ப்பு உள்ளது.' பாருங்கள். ஆன்ட்ராய்டு மொபைல்களில், இ-மெயில்களில் கூட நாம் அதிகம் தமிழில் டைப் செய்ய ஆரம்பித்து விட்டோமே. இதுவும் நல்ல விஷயம் தான். தமிழ் என்றில்லை அனைவரும் அவரவர் தாய்மொழியில் இவ்வாறு டைப் செய்து பிறருக்கு வாழ்த்துக்களை, செய்திகளாக அனுப்பும் போது, கிடைக்கும் சுகமே தனி தான் போங்க. "நம் தாய்மொழி என்பது நமக்கு அன்னையின் ஸ்பரிசத்தை உணர்த்துகிறது." என்று தான் கூற வேண்டும். சமீபத்தில் திருவள்ளுவர் சிலை கங்கை நதிக்கரையில் வைக்கப்பட்டதும், "நம் தாய்மொழியாம் தமிழ் மொழிக்கு கிடைத்த ஒரு கௌரவம்." என்று தான் கூற வேண்டும். 'காளிதாஸ்', 'பூம்புகார்', 'திருவிளையாடல்', திருஞானசம்பந்தர்', 'கர்ணன்', 'அசோகா', 'ஆரவல்லி சூரவல்லி', 'மொகல் ஏ அசம்', 'ராஜராஜ சோழன்' என்று அந்த காலம் தொடங்கி, இந்த காலம் வரை 'பாகுபலி', 'காஷ்மோரா' என்று பல எபிக் திரைப்படங்கள் வருவது நல்ல விஷயம் தானே? ●





# எதிர்ப்பு வலுக்கிறது ஹைட்ரோ கார்பன் திட்டத்துக்கு!



‘கோடாங்கி’ கோவிந்தன்

தமிழ் நாட்டிலேயே மிகவும் பின்தங்கிய மற்றும் வறட்சி மாவட்டமான புதுக்கோட்டை மாவட்டத்தின் நெடுவாசல் என்ற ஊரில் ஒரு மக்கள் புரட்சியே வெடித்து விட்டது தான் என்று கூற வேண்டும். அங்கு மட்டுமல்லாமல் சென்னையில் உள்ள புதுக்கோட்டையை பூர்வீகமாக கொண்ட பலரும் இந்த புரட்சியில் பங்கு பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே விவசாயிகள் பலர் தற்கொலை செய்து கொண்டு வரும் இந்த நிலையில், இங்குள்ள விளை நிலங்களிலிருந்து ஹைட்ரோ கார்பன் என்ற இயற்கை எரிவாயு எடுக்க இருப்பதால் தான் இந்த மக்கள் புரட்சி எழுந்துள்ளது. ஏற்கனவே இந்த மாவட்டங்களில் நிலத்தடி நீர் மட்டம் என்பது குறைவு என்பது யாவரும் அறிந்தது. ஆனால் இந்த வறட்சி மாவட்டத்தை சேர்ந்த பலர் இப்போது சென்னை உட்பட உலகெங்கும் உள்ள பல இடங்களில் பெரிய பதவிகளில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. அது சரி, நாம் ஹைட்ரோ கார்பன் எடுப்பதால் விளை நிலங்கள் எப்படி பாதிக்கப்பட போவதை காண்போம்.

இவ்வாறு ஹைட்ரோ கார்பன் எடுக்கும் போது நிலத்தில் அடிமட்டம் வரை செல்லும் என்பதால், கடல் நீர் உள்ளுக்குள் புகுந்து விடவும், பிறகு நீர் மட்டம் குறைந்து விளை நிலங்கள் அனைத்தும் வறண்டு போகவும் வாய்ப்பு உள்ளது.

இந்த இயற்கை எரிவாயு எடுக்கும் திட்டத்தை மத்திய அரசு கைவிடும் வரை நெடுவாசல் மக்களுடன் சேர்ந்து கல்லூரி மாணவ மாணவிகள், வணிக சங்க பிரமுகர்களும் தங்கள் எதிர்ப்பை தெரிவித்தனர்.

இதற்கு கமல்ஹாசன் உட்பட பல பிரபலங்களும் சமூக வலைதளங்கள் மூலம் தங்கள் எதிர்ப்பை தெரிவத்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. உரிமை மீட்பு குழு மற்றும் ஹைட்ரோ கார்பன் எதிர்ப்பு கூட்டு இயக்கம் சார்பிலும் ஆங்காங்கே உண்ணாவிரத போராட்டங்கள் நடந்து வருகின்றன.

இந்த இதழ் வெளியாகும் போது இந்த பிரச்சனைக்கு தீர்வு கிடைத்திருக்கலாம்.

அதே சமயம் இது குறித்து மத்திய அமைச்சர் பொன் ராதாகிருஷ்ணன், நெடுவாசல் மக்கள் சொல்லாத வரை இந்த திட்டம் அமல்ப்படுத்தப்பட மாட்டாது. “கூடங்குளத்தில் அணுமின் நிலையம் கொண்டு வருவதற்கு முதலில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. ஆனால் அவ்வாறு அணுமின் நிலையம் கொண்டு வரப்படவில்லை எனில், தமிழகமே இருளில் மூழ்கி இருக்கும். அரசியல் ஆதாயத்துக்காக சிலர் மத்திய அரசின் பல திட்டங்களை எதிர்க்கின்றனர்.

தமிழகத்தை பாதிக்கக் கூடிய எந்த ஒரு திட்டத்தையும் மத்திய அரசு ஒருபோதும் திணிக்காது. மாறாக இந்த திட்டம் குறித்த நன்மை, தீமைகளை யாராக இருந்தாலும் முதலில் அறிந்து பேச வேண்டும். இந்த திட்டத்தைப் பற்றி எந்த ஆய்வு செய்யாமல் அறிக்கை விடுகின்றனர் சிலர். அறிக்கை விடுபவர்கள் விஞ்ஞானிகள் அல்ல. ஒரு திட்டத்தால் பாதிப்பு என்றால், எக்காரணம் கொண்டும் திட்டம் செயல்படுத்தப்பட மாட்டாது எனக் கூறியிருக்கிறார்.

ஏற்கனவே ஜல்லிக்கட்டு நடத்தக் கூறி சென்னை மெரினாவில் மட்டுமல்லாமல் தமிழகம் எங்கும் இப்படி அறப்போராட்டங்கள் நடந்தன. அதே பாணியில் இப்போது ஹைட்ரோ கார்பன் திடைத்துக்கும் எதிர்ப்பு கிளம்பி உள்ளது என்பது பாராட்டத்தக்கது. வாட்ஸ்அப், ஃபேஸ்புக் என இது குறித்து தகவல் பரப்பப்படுவதால், இத்தகைய மக்கள் புரட்சி ஏற்படுகிறது.

மத்திய அரசின் இந்த திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து நெடுவாசலில் சென்னை, ஈரோடு, நாமக்கல் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்ந்த கல்லூரி மாணவர்கள் அறப் போராட்டத்தில் ஈடுபட்டனர். திலகர் திடல், நல்லாண்டார் கொல்லை, கொடைக்காடு போன்ற கிராமங்களிலும் இத்தகைய போராட்டங்கள் நடந்தன.

இது குறித்து சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் பேசுகையில், “மீத்தேன் என்பதன் மறுபெயர் தான் ஹைட்ரோ கார்பன். இந்த திட்டம் அமல்படுத்தப்பட்டால் விவசாயிகளின் வாழ்வாதாரம் மற்றும் சுற்றுச்சூழலும், நிலத்தடி நீர் மட்டமும் பெரிதளவு பாதிக்கப்படும்.” என்றார்.

இப்படியே போனால், “விவசாயம் என்ற ஒன்று காணாமலே போய் விடும்.” என்று தான் கூற வேண்டும்.



# வெற்றிக்கு பின்னால் உள்ள சவால்கள்!

க.வீரேந்திரன்

உபி மற்றும் உத்ராகண்டில் பாஜகவிற்கும் மற்றும் பஞ்சாபில் காங்கிரஸுக்கும் ஆட்சி அமைக்கும் அதிகாரத்தை அளித்து மக்கள், 'இந்த பகுதிகளை முன்னேற்றப் பாதையில் வழி நடத்தி செல்ல ஆரம்பித்து விட்டனர்.' நிலைமை இப்படி இருக்க மேற்சொன்ன கட்சிகள் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள நிலையில், அவை மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை காப்பாற்ற வேண்டும்.

சமீபத்தில் நடந்த உபி சட்டசபை தேர்தல் மூலம் மக்கள், 'பெரும்பான்மை பெற்ற கட்சிகளை கூட, தாங்கள் நினைத்தால் விண்ணிலிருந்து மண்ணுக்கு தள்ள முடியும்.' என்பதை நிரூபித்து விட்டனர். இதற்கு உதாரணமாக 2007-ல் வெற்றி பெற்ற பகுஜன் சமாஜ் கட்சி மற்றும் 2012-ல் வென்ற சமாஜ்வாதி கட்சியை உதாரணமாக கூறலாம். தலித்துகள் மற்றும் பின்தங்கிய சமூகத்தின் நலன் விரும்பி என்று கருதப்பட்ட முலாயம் சிங் யாதவ், கன்ஷிராம் போல் கருதப்பட்ட மாயாவதி மற்றும் அகிலேஷ் யாதவ் என பலரும் இந்த சட்டசபை தேர்தல் முடிவால் ஆடிப்போய் உள்ளனர்.



இந்த உபி சட்டசபை தேர்தலில் நரேந்திர மோடி மற்றும் அமித் ஷா ஜோடி பாஜகவுக்கு புது வடிவம் தரும் வகையில், தலித்துகள், பின்தங்கியவர்கள் ஆகியோருக்கு நலன் விரும்பும் கட்சி பாஜக என்று கூறித்தான் இந்த வெற்றியை பெற்றுள்ளனர். 1991-ல் கூட பாஜக இத்தனை தொகுதிகளில் வெற்றி பெறவில்லை.

லோக்சபா தேர்தலுடன் ஒப்பிடும் போது, சட்டசபை தேர்தலில் இதன் வாக்கு விகிதம் குறைவு தான். லோக்சபா தேர்தலில் பாஜகவுக்கு 42.63%

வாக்குகள் கிடைத்தன. அதுவே சட்டசபை தேர்தலில் இந்த வாக்கு விகிதம் என்பது 39.70% தான்.

பாஜகவுடன் சக மற்றும் பசகவும் பயங்கர சவால்களை சந்தித்தது. எப்படி பாஜகவுக்கு சில இடங்களில் பெரும்பான்மை கிடைத்ததோ, அது போன்று காங்கிரஸுக்கும் உபி தவிர சில மாநிலங்களில் தனி இடம் கிடைத்தது. இப்படி இந்த 5 மாநில சட்டசபை தேர்தல் முடிவுகள் என்பன இந்திய அரசியலில் ஒரு மாற்றத்தை கொண்டு வந்து விட்டதாகவே கருதப்படுகிறது. உபி சட்டசபை தேர்தலுக்கு முன்பாக அமித் ஷா லக்னோவின் மோகன்லால் கன்ச் தொகுதியைச் சேர்ந்த எம்.பியான கௌஷல் கிஷோர் வீட்டுக்குச் சென்று உணவருந்தினார். கௌஷல் கிஷோர் ஒரு தலித் தலைவர் என்பது குறிப்பிடத்தக்கது. இப்படி



கேசவ் பிரசாத் மோய

இந்த சட்டசபை தேர்தல் சமயத்தில் பாஜக பல அதிரடி ஸ்டண்டுகளை கையாண்டது.

2014-ன் லோக்சபா தேர்தலுக்கு முன்னதாக வரை பாஜக உயர் சாதியினரின் கட்சியாக மட்டுமே கருதப்பட்டது. ஆனால் இந்த தேர்தல் சமயத்தில் மோடி-ஷா கூட்டணி நடந்து கொண்ட விதம் என்பது, இந்த கருத்தை மாற்றி விட்டது. பாஜகவில் தலித்துகள் மற்றும் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த தலைவர்கள் ஏற்கனவே பலர் உள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. உபியின் அனுப்ரியா படேல் மற்றும் கௌஷல் கிஷோர் போன்ற பல தலைவர்கள் உள்ளனர். சக-பசக ஆகியவற்றை பார்த்து ஏற்கனவே கோபத்தில் இருந்த சில கட்சிகளை சேர்ந்த மக்கள் இப்படி பாஜகவுக்கு ஒரு வாய்ப்பை தந்து விட்டனர். உபியை பொருத்த மட்டில் தலித் இனத்தவர்களின் வாக்கு எண்ணிக்கை என்பது அதிகம். இந்த நிலையில் பாஜகவுக்கு இவர்களுடைய வாக்கு கிடைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. மேற்சொன்னபடி தலித் இனத்தவர்கள் அதாவது ஜாடவ் இனத்தைச் சேர்ந்தவர்கள் இக்கட்சிக்கு ஆதரவாக உள்ளனர்.

## இக்கட்டான சூழலில் பசக

பகுஜன் சமாஜ் கட்சி என்பது வெறும் கட்சி மட்டுமல்ல, இது சமுதாயத்தில் உள்ள பின்தங்கிய இன மக்களுக்கும் தோள் கொடுக்க வேண்டிய ஒரு கட்சியாகும். முன்பு கன்ஷிராம் பாஜக எழுப்பிய ராமர் கோயில் முழக்கத்தை சொல்லி சொல்லியே தலித், பின்தங்கிய இன மக்களின் ஆதரவைப் பெற்றார். ஆனால் காலம் செல்ல செல்ல பகுஜன் சமாஜ் கட்சியின் கொள்கை என்பது மாறத் தொடங்கி விட்டது. மாயாவதி முன்பு முதல்வரான பிறகும், இந்த இன மக்களுக்கு எதுவும் செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. 2007-ல் மீண்டும் ஆட்சிக்கு வந்த இது, அப்போதும் தலித்துகளை கண்டு கொள்ளவில்லை. ஆம், தலித்துகள் மத்தியில் மாயாவதி தனக்கென ஒரு தனி இடத்தை பெறவில்லை. அதனால் தான் பசக மீதான மக்களின் அபிமானம் என்பது குறையத் தொடங்கியது.

2009-ல் நடந்த லோக்சபா தேர்தலின் போது, மாயாவதி பிரதமர் ஆகும் கனவில் இருந்தார். ஆனால் அந்த தேர்தலிலும் பசகவுக்கு தான் நினைத்த மாதிரியான வெற்றி என்பது கிடைக்கவில்லை. 2012-ல் நடந்த சட்டசபை தேர்தலின் போது, பசக ஆட்சியை இழந்தது. 2014-ல் நடந்த லோக்சபா தேர்தலின் போது பசகவுக்கு ஒரு இடம் கூட கிடைக்கவில்லை. இந்த 2017-ல் சட்டசபை தேர்தல்களில் பசக ஆட்சி அதிகாரத்தை பிடிக்கும் முக்கியமான ஒரு கட்சியாக கருதப்பட்டது. அப்படி இருந்தும் அதற்கு 19 இடங்களே கிடைத்தன. இதுவே மாயாவதி எப்படி வேலை செய்கிறார் என்பதை மக்களுக்கு எடுத்துக்காட்டுகிறது. இவ்வாறு பசகவின் வாக்கு வங்கி என்பது கொஞ்சம் கொஞ்சமாக தகர்ந்து கொண்டே வருகிறது என்று தான் கூற வேண்டும். ஆம், மாயாவதியின் மாயாஜாலம் என்பது மெல்ல மெல்ல குறைந்து வருகிறது. பசகவுக்கு 1991-ல் நடந்த சட்டசபை தேர்தலில் 12 இடங்கள் கிடைத்தன. ஆனால் இப்போது நடந்த சட்டசபை தேர்தலில் 19 இடங்களுடன் அது நின்று விட்டது. இத்தகைய குறையைப் போக்க

வேலைக்கு ஆகவில்லை ராகுல்காந்தி - அகிலேஷ் யாதவ் கூட்டணி.






ஆள் அரவமற்று போனது ப.ச.க கட்சி அலுவலகம்.

மாயாவதி தலித்-முஸ்லிம் கூட்டணி என்று கூறி, புதிதாக ஒரு விஷயத்தை உருவாக்கினார். ஆனால் அதற்கும் மக்களிடம் எந்த வரவேற்பும் கிடைக்கவில்லை.

பசகவிடம் இப்போது உபியின் எந்த ஒரு எம்.எல்.ஏவும் கையில் இல்லை. இவர்கள் உதவியுடனாவது மாயாவதி 2018-ல் ராஜ்ய சபாவில் தங்கள் உறுப்பினர்களை காப்பாற்றியிருக்க முடியும். இப்படி தேசிய அளவில் புகழ்பெற்றிருந்த ஒரு கட்சியானது, மெது மெதுவாக தன் பொலிவை இழந்து வருகிறது.



மாயாவதி


மாயாவதி லோக்சபா மற்றும் சட்டசபை தேர்தல்களை விட, ராஜ்ய சபாவை தான் பெரிதும் நம்பி இருக்கிறார். மாயாவதியின் ராஜ்ய சபா உறுப்பினர் பதவி காலம் ஏப்ரல் 2, 2018 உடன் முடிவடைகிறது. இந்த நிலையில் அவர் மீண்டும் எப்படி ராஜ்யசபாவிற்குள் செல்ல முடியும் என்பது உண்மையிலேயே ஒரு கடினமான விஷயம் தான்.

பசக தேர்தலில் வெற்றி பெற, கோடீஸ்வர தலைவர்களுக்கு சீட்டு தர ஆரம்பித்து விட்டது. இந்த நிலையில் தலித்துகளின் நிலை என்ன என்பது கேள்விக்குரியாகத் தான் உள்ளது. எது எப்படியோ பசகவிடம் சீட்டு வாங்கி வேட்பாளராக நிற்பவர்கள், பிறகு தலித்துகளின் வாக்கைப் பெற்று அந்தந்த தேர்தல்களில் வெற்றி பெற்று விடுவர். ஆனால் அதன் பிறகு அவர்கள் தலித் இன மக்களுக்கு, அவர்கள் சமூகத்தின் வளர்ச்சிக்கு என்ன செய்வார்கள்? என்பது உங்களுக்கே தெரியும். நிலைமை இப்படி இருக்க மக்கள் அந்தந்த தலைவர்கள் மீது சினம் கொள்ளத் தானே செய்வார்கள்?

மேற்சொன்ன வேட்பாளர்களில் பெரும்பாலும் கான்ட்ராக்டர்கள், சொத்துக்காரர்கள் என பணம் படைத்தவர்கள் மட்டுமே இருப்பர். இப்படி இவர்களை தங்கள் கட்சியின் தேர்தல் வேட்பாளராக நிறுத்தி, மண்ணின் மைந்தர்களை அதாவது அந்தந்த இனத்தை சார்ந்த தலைவர்களுக்கு வாய்ப்பு என்பது முற்றிலும் அளிக்கப்படுவதே இல்லை. நடந்து முடிந்த இந்த சட்டசபை தேர்தல்களில் கூட, பசக கோடீஸ்வரர்களுக்கு மட்டுமே சீட்டு அளித்தது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் பாஜக தலித் மற்றும் பின்தங்கிய இன மக்களின் மன வேதனையை புரிந்து கொண்டதால் தான், நடந்து முடிந்த இந்த சட்டசபை தேர்தல்களில் அதனால் வெற்றி பெற முடிந்தது. ஆம், பாஜக இந்த தேர்தல்களின் மூலம் 'புதிய இந்துத்வா' என்ற பாடத்தை கற்பிக்க ஆரம்பித்து விட்டது. தலித்துகளையும் இந்த புதிய கொள்கையின் மூலம் தனக்கு ஆதரவாக திரட்டிக் கொள்ள ஆரம்பித்து விட்டது பாஜக.

## மண்டல் ஆயோக் மூலமான அரசியல்

அயோத்தியில் ராமர் கோயில் கட்ட எழுப்பப்பட்ட கோஷத்துக்கு முன்பு, மண்டல் ஆயோக் காரணமாக எப்படி இந்தி பேசப்படும் மாநிலங்களின் அரசியலில் மாற்றம் ஏற்பட்டதோ, அதே போன்ற ஒரு நிலை தான் இப்போதும் உள்ளது. இதுவரை பசகவை மாயாவதியும், சகவை முலாயம் சிங் யாதவின் குடும்பத்தினரும் தங்கள் கட்டுக்குள் வைத்திருந்தனர். ஜாடவ் சாரா இனத்தவர்கள் போல, யாதவர்கள் சாரா இனத்தவர்கள் காரணமாக சக உடையத் தொடங்கியது. 2012-ல் பசகவை தோற்கடித்த பிறகு, சக-வுக்கு பின்தங்கிய மற்றும் உயர்சாதியைச் சேர்ந்த பல மக்கள் ஆதரவு தெரிவித்தனர். இதனால் அப்போது சக தனி பெரும்பான்மையுடன் ஆட்சி அமைத்தது. ஆனால் ஆட்சி அமைத்த பிறகு யாதவர் இல்லாத மக்கள் கண்டுகொள்ளப்பட வில்லை. 2014-ல் நடந்த லோக்சபா தேர்தலில் சகவைச் சேர்ந்த வெற்றி பெற்ற அந்த 5 நபர்களும் முலாயம் சிங் யாதவின் குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் சில மாதங்களுக்கு முன்பு இந்த கட்சி குடும்பத்தில் சர்ச்சைகள் எழ, அந்த கட்சி உடைந்து விட்டது.



சிவபால் யாதவ்

அகிலேஷ் யாதவ் தன் அணியில் இருந்த தன் குடும்பத்தைச் சேர்ந்த இளைஞர்களை மட்டுமே நம்பினார். இந்த நிலையில், சக காங்கிரஸ் உடன் கூட்டணி அமைத்தது. இருப்பினும் அது தேர்தலில் படுதோல்வி அடைந்தது.

இவ்வாறு ஆட்சி அமைக்க பல கட்சிகள் தங்களால் முடிந்த மட்டும் எவ்வளவோ போராடினர். ஆனால் மக்கள் மனதில் என்ன இருந்தது என்பது, இந்த தேர்தல் முடிவுகள் மூலம் வெளிவந்து விட்டது. இனி உபி மற்றும் உத்ராகண்டில் பாஜக அரசு எப்படி ஆட்சியை வழி நடத்திச் சென்று, அந்த மாநிலங்களை முன்னேற்ற பாதையில் கொண்டு செல்கிறது என்று பொறுத்திருந்து காண்போம். ●

'ரவுண்ட்ஸ்' ரங்கன்

# சுற்றுலா சென்ற இடத்தில்...

சுற்றுலா என்பது நம் சோர்ந்து போன மனதையும், உழைத்து உழைத்து களைத்து போன உடலுக்கு சுறுசுறுப்பு தரவும் செல்வதாகும். ஆனால் இவ்வாறு புத்துணர்ச்சி பெற செல்லும் சுற்றுலா என்பது சில சமயம் உயிருக்கும் உலை வைத்து விடுகிறது. இவ்வாறு பல சமயங்களில் நடப்பது தான் கொடுமையான விஷயம். ஓர் வருடத்துக்கு முன்பு ஒகேனக்கலில் படகு சவாரி தமிழகம் முழுவதும் இருந்து இங்கு வரும் சுற்றுலா பயணிகள், கடற்கரையில் உள்ள கலங்கரை விளக்கம், பழமையான கோயில்கள் போன்றவற்றை சென்று பார்ப்பது வழக்கம். இவ்வாறு செல்லும் போது படகு சவாரியும் சிலர் செய்வதுண்டு. அவ்வாறு மணப்பாட்டில் இருந்து, கடலில் சில 100 மீட்டர் தூரம் சென்ற நிலையில், ஒரு படகு திடீரென்று நடு கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகி, பலர் மட்டுமல்லாமல், 9 வயதான ஆகாஷ், 10 வயதான சுரேந்திரன் என பலரும் இறந்துள்ளனர்.

## எச்சரிக்கை அவசியம்

பொதுவாக நாம் செல்லும் வாட்டர் தீம் பார்க் போன்ற இடங்களில் படகு சவாரி செய்யும் போது, லைஃப் ஜாக்கெட் அணிந்து கொள்ள வற்புறுத்தப்படுகிறோம். இவ்வாறு லைஃப் ஜாக்கெட் அணிவது நமக்கு பிடிக்கவில்லை நிலை மாற நம் மக்களிடையேயும் விழிப்புணர்வு என்பது மிகவும் அவசியம். இல்லையென்றால் இத்தகைய அஜாக்கிரதை காரணமாக ஏற்படும் விபத்துக்கள் அடிக்கடி நடந்து கொண்டு தான் இருக்கும். தெரிந்தே நம் விலை மதிப்பற்ற உயிருக்கு நாமே உலை வைத்துக் கொள்வதை என்னவென்று சொல்வது?

எது எதற்கெல்லாம் செலவு செய்யும் நாம், சுற்றுலா செல்லும் போது படகு சவாரி செய்ய முடிவெடுத்தால், அதற்குரிய பாதுகாப்பு பொருட்களை அதாவது லைஃப் ஜாக்கெட் போன்றவற்றை வாங்கிக் கொண்டு செல்லலாமே? ஆன்லைனில் கண்டவற்றையும் வாங்கி குவிக்கும் நாம், ஆன்லைனில் கூட இது போன்ற சாதனங்கள் விற்கப்படுவதால், இவற்றை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வாங்கிக் கொண்டு படகு சவாரி செய்வது தான் பாதுகாப்பானது.



செய்த பல சுற்றுலா பயணிகள் பரிதாபமாக இறந்து போனதும், சென்னைக்கு அருகாமையில் உள்ள இதே போன்ற சில சுற்றுலாத்தலங்களில் படகு சவாரி செய்யப் போய் பரிதாபமாக பலர் தங்கள் உயிரை விட்டனர்.

இதே போன்று சமீபத்தில் திருச்செந்தூர் அருகே, மணப்பாடு கடலில் படகில் சென்ற பலர் இறந்து போய் விட்டனர் என்பது மிகவும் வேதனைக்குரிய ஒன்று. இறந்து போயினர்.

தூத்துக்குடி மாவட்டம், தட்டார்மடத்தை அடுத்த படுக்கப்பத்து அழகம்மன் புரம் என்ற கிராமத்தைச் சேர்ந்த சுமார் 50 பேர் மணப்பாடுக்கு சுற்றுலா வந்துள்ளனர். இரண்டு படகுகளில் 40 பேர் சென்றுள்ளனர். அளவுக்கு அதிகமாக அந்த படகில் ஆட்களை ஏற்றியதால் தான் இந்த கோர விபத்தே நடந்துள்ளது. இந்த விபத்தில், ஜெயராமன், முருகேஸ்வரி, முத்துச்செல்வி என பெரியவர்கள் என்றாலும், இவை தக்க சமயத்தில் நம் உயிரை காக்கும். ஆனால் பிரபல சுற்றுலாத்தலங்களில் சில இடங்களில் மட்டுமே லைஃப் ஜாக்கெட் அணியுமாறு கூறப்படுகிறது. அதிலும் ஒகேனக்கல், பழவேற்காடு போன்ற இடங்களில் அங்குள்ள சிலர் காசுக்கு ஆசைப்பட்டு இவ்வாறு அளவுக்கு அதிகமாக ஒரு படகில் பலரை ஏற்றிச் செல்வதால் தான், இப்படிப்பட்ட விபத்துக்கள் மற்றும் உயிரிழப்புக்கள் நடைபெறுகின்றன. இந்த மணப்பாடு படகு விபத்து குறித்து போலீசார் விசாரித்து இதற்கு காரணமாக இருந்த அந்த படகு உரிமையாளரான கெவின் (வயது 40) என்பவரை தூத்துக்குடியில் கைது செய்தனர். இந்த படகு விபத்தில் பலியானவர்கள் குடும்பத்துக்கு முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி இரங்கல் தெரிவித்ததோடு, அந்த குடும்பங்களுக்கு தலா 2 லட்சம் ரூபாய் வழங்கவும் உத்தரவிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. ●

# நாட்டு இன மாடுகளுக்கு திடீர் மவுசு!

ஜல்லிக்கட்டு போராட்ட எதிரொலியாக கரூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் நம் நாட்டு இன மாடுகளுக்கு திடீர் மவுசு ஏற்பட்டுள்ளது. ஆம், மீண்டும் நாட்டு மாடுகளை பலர் அதிக அளவில் வளர்க்க ஆரம்பித்து விட்டனர்.


இதனால் காங்கேயம் இன மாடுகளை விலைக்கு வாங்க பலர் போட்டி போடுகின்றனர். தமிழகத்தில் கரூர், கோவை, ஈரோடு, சேலம், திருப்பூர், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி உள்ளிட்ட மாவட்டங்களில் கடின உழைப்புக்கு பெயர் போன காங்கேயம் இன மாடுகள் வளர்க்கப்பட்டன. இத்தகைய மாடுகள் தொடர்ந்து 12 மணி நேரம் உழவு, பாரம் வண்டி இழுத்தல் உள்ளிட்ட பணிகளில் ஈடுபடுத்தப்பட்டன. மேலும் காங்கேயம் இன மாடுகளின் பால் ஏ-2 ரகத்தை சேர்ந்தது.

இதில் உடலுக்கு தேவையான கொழுப்பு சத்து இருப்பதால், சர்க்கரை நோய், ரத்த கொதிப்பு உள்ளிட்ட நோய்கள் ஏற்பட வாய்ப்பில்லை. இதில் மருத்துவ குணம் உண்டு. இத்தகைய மாடுகள் வறட்சி காலத்தில் வெறும் பனை ஓலைகளை தின்று உயிர் வாழும். மேலும் காங்கேய மாடுகளின் கழிவுகள் விவசாயத்துக்கு பயன்படுத்தப்பட்டது.

மாடுகளின் வண்ணங்களை கொண்டு மூன்று வகையாக பிரிக்கலாம். இதில் 95 சதவீதம் 'மயிலை' எனப்படும் வெள்ளை நிறம் கொண்டவை ஆகும். மூன்று சதவீதம் 'செவலை' எனப்படும் சிவப்பு நிறம் கொண்டவை ஆகும். இரண்டு சதவீதம் 'காரி' எனப்படும் கருப்புறம் நிறம் கொண்டவை ஆகும்.

கடந்த 1990-ம் ஆண்டுகளில் 11 லட்சத்து, 76 ஆயிரம் மாடுகள் இருந்தன. 2000-ம் ஆண்டில் நான்கு லட்சத்து, 40 ஆயிரமாக குறைந்து, தற்போது இரண்டரை லட்சமாக உள்ளது.

காங்கேய இன மாடுகள் ஒரு வேளைக்கு மூன்று முதல் நான்கு லிட்டர் பால் கறக்கும். பால் வர்த்தகத்துக்காக கலப்பின மாடுகளை அதிகம் வளர்க்க துவங்கியதால், காங்கேயம் இனம் உள்பட நாட்டு மாடுகளின் இனப் பெருக்கம் குறைந்தது. மேலும் கடந்த மூன்று ஆண்டுகளாக தமிழகத்தில் ஜல்லிக்கட்டு போட்டி, ரேக்ளா போட்டிக்கு தடை இருந்ததால், நாட்டு மாடுகளை யாரும் வாங்க முன்வரவில்லை. இந்நிலையில் மாணவர்கள், இளைஞர்கள் நடத்திய போராட்டத்தால், ஜல்லிக்கட்டு போட்டிகள் தமிழகத்தில் மீண்டும் நடக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் காங்கேயம் இன மாடுகள் உள்ளிட்ட நாட்டு மாடுகளுக்கு செம மவுசு ஏற்பட்டுள்ளது.




இது குறித்து அரவக்குறிச்சி புளியம்பட்டி பகுதியை சேர்ந்த நல்லசிவம் கூறுகையில், "கடந்த 20 ஆண்டுகளுக்கு முன் கிராமப்பகுதியில் பசுமாடுகளுக்கு சினை பிடிக்க காளைகளை பயன்படுத்தினர். ஆனால் தற்போது ஊசி மூலம் மாடுகளுக்கு சினை பிடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இதனால் நாட்டு மாடுகளின் இனப்பெருக்கம் குறைந்தது.

மேலும் ஜல்லிக்கட்டு, ரேக்ளா போட்டிக்கு தடை இருந்ததால், வியாபார ரீதியாக பாலுக்காக, கலப்பின மாடுகளை விவசாயிகள் வாங்கினர். தற்போது நடந்த ஜல்லிக்கட்டு போராட்டத்தால், காங்கேயம் உள்ளிட்ட நாட்டு இன மாடுகளுக்கு கிராக்கி கூடியுள்ளது. ஒரு நாட்டு மாட்டின் கன்றுகுட்டி ஒரு லட்ச ரூபாய் வரை தற்போது விலை போகிறது." என்றார்.

சி.ஆனந்தகுமார்

கரூர் செல்லாண்டிப் பாளையம் பகுதியைச் சேர்ந்த கல்லூரி பேராசிரியர் ராகுல் கூறுகையில், "ஜல்லிக்கட்டு போராட்டத்தின் போது மாணவர்கள், இளைஞர்கள் கலப்பின மாடுகளின் பாலை குடித்தால் ஏற்படும் விளைவுகள் குறித்து சமூக வலைதளங்கள் மூலம் பரப்பினர். சமீப காலமாக இளம் வயதினரையும் தாக்கியுள்ள சர்க்கரை நோய், கலப்பின மாடுகளின் பாலை குடிப்பதால் வருவதாக தெரிய வந்துள்ளது. இதனால் பொதுமக்களிடம் நாட்டு மாடுகள் பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது." என்றார்.

கரூரை சேர்ந்த ரமேஷ் கூறுகையில், "ஜல்லிக்கட்டு, ரேக்ளா போட்டி மற்றும் உழவு பணிகளில் ஈடுபடுத்தப்படும் நாட்டு இன

## மாடுகளுக்கு கொடுக்கப்படும் தீவனம்...

இந்த வரப்பாளையத்தில் உள்ள ஷெட்டில் அமைக்கப்பட்டிருக்கும் மாட்டு கொட்டகைகளில் உள்ள மாடுகளுக்கு தினமும் கோ 4, கோ 5 ரக புல்கள் மற்றும் 25 ஏக்கரில் விளைவிக்கப்பட்டு, ஒற்றை மாட்டு வண்டியில் நாள் ஒன்றுக்கு 3 வண்டி பச்சை புல் மற்றும் வைக்கோல், சோளத்தட்டை ஆகியவை லிமிட்டாக கலக்கப்படுகின்றது.



காளை மாடுகள் தான் இனப்பெருக்கத்துக்கும் பயன்படுத்தப்பட்டது. ஆனால் இனப்பெருக்கத்துக்கு ஊசியை பயன்படுத்தியதால், கலப்பின மாடுகள் அதிகரித்தது. ஜல்லிக்கட்டு, ரேக்ளா போட்டிகள் தொடர்ந்து நடந்தால், நாட்டு இன மாடுகள் இனப்பெருக்கம் அதிகரிக்கும். இது மட்டுமல்லாமல், நாட்டு மாடுகளின் பாலை போட்டி போட்டு வியாபாரிகளும், பொதுமக்களும் வாங்கி வரும் நிலையில் எப்படியோ ஒட்டு மொத்த தமிழர்களையும் ஒருங்கிணைத்து, ஒரு ஜல்லிக்கட்டு போராட்டத்தினால் அடிமாடு (கறிகூடாரங்களுக்கு) செல்லும் நாட்டு மாடுகள் குறைந்து, தற்போது தமிழக அளவில் நாட்டு மாடுகள் பேணிக்காக்கப்படுகின்றன.

கரூர் மாவட்டத்தில் நாட்டு மாடுகள் வளர்ப்பதில் தமிழர்கள் மும்மரமாக ஈடுபட்டு வந்ததை நாம் பார்த்தோம். இந்நிலையில் அதிக பாலை கறக்கும் வெளிநாட்டு மாடுகளின் பால் 'ஏ1' ரகமாகவும், இந்தியாவில் தமிழக காங்கேயம் மாடுகள், குஜராத்தின் கிர், காங்ரேஜ் மாடுகள், பஞ்சாப் ரதி மாடுகள், ஆந்திரா ஒங்கோல் மாடுகள் மட்டுமில்லாது, தார்பார்கர், சாஹிவால் உள்ளிட்ட பல்வேறு இந்திய மாடுகளை கரூர் அருகே சுமார் *150*-க்கு மேற்பட்ட மாடுகளை வளர்த்து வரும் முதியவர், குழுமம் குப்புசாமி (வயது *64*), கரூர் மாவட்டம், மண்மங்கலம் வட்டம், வரப்பாளையம் பகுதியில் அம்மாடுகளின் பாலை 'ஏ2' ரகமாகவும் தரம் பிரித்து விற்பனை செய்து வருகின்றார். இவ்வகையான பாலை மக்கள் பருகுவதால் வைட்டமின் டி, எலும்புகளை உறுதி செய்கின்றது. ஆகவே தற்போது ரூ *50*-க்கு ஒரு கிலோவிற்கு விற்பனை செய்த பால், ரூ *60*-க்கு விற்பனை செய்வதாகவும் அந்த பாலை தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கு வாங்கிச் சென்று கோவை, ஈரோடு, திருப்பூர், நாமக்கல், சென்னை உள்ளிட்ட பல பகுதிகளுக்கு வாங்கிச் சென்று அவர்கள் தங்களது செலவினத் தொகைக்களுக்கு ஏற்றவாறு ரூ.*130* முதல் ரூ.*150* வரை விற்பனை செய்யப்படுவதாகவும், தற்போது தமிழகத்தில் ஜல்லிக்கட்டினால் நாட்டு மாடுகளின் விருத்தி அதிகரிப்பதோடு, நாட்டு மாடுகளின் பாலையும் பொதுமக்கள் மிகவும் விரும்பி, பருகி வருவதாகவும் அந்த மாடுகளை வளர்க்கும் நிர்வாகி தெரிவித்துள்ளார்.

மேலும் எருமைகளும், நாட்டு எருமைகளும், முர்ரா எருமைகளும் தான் வளர்த்து வருவதாகவும் பெருமை கொண்ட இவர், இந்த மாடுகளுக்காக தன்னுடைய தென்னந்தோப்பில் ஊடுபயிராக கம்பு, சோளம், மக்காச்சோளம் உள்ளிட்ட பயிர்களை விளைவிப்பதோடு, பச்சை பயிர்களோடு, சோளத்தட்டை, வைக்கோல் என்று காய்ந்த தீவனங்களும் கொடுத்து மாடுகளுக்கு தனி அங்கீகாரம் கொடுத்து வரும் இவர் தமிழக அளவில் மட்டுமில்லாமல், தென்னிந்திய அளவில் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் மாடுகள் வளர்ப்பது குறித்து ஆலோசனைகளையும் தெரிவித்து வருகின்றார்.

*62* வயதான இவர் ஆரம்பத்திலிருந்தே விவசாய குடும்பத்தில் பிறந்து, பின்பு கரூரில் டெக்ஸ்டைல் நிறுவனம் நடத்தி வந்த நிலையில், அந்த டெக்ஸ்டைலை விட, மாடுகளிடம் அன்பை செலுத்தியதையடுத்து, முதலில் காங்கேயம் மாட்டில் பொட்டை மாடு ஒன்று வாங்கினார். கடந்த *5* வருடத்திற்கு முன்னரே மாடுகள் வளர்ப்பதில் மும்முரம் காட்டிய அவர், அப்போது வாங்கிய பொட்டை மாட்டிற்கு துணையாக மற்றொரு பொட்டை மாட்டையும் வாங்கினார். பிறகு உள்ளூர் எருமை மாடுகளையும் அப்படி 'டெல்லி எருமை' என்கிற முர்ரா எருமைகளையும் வாங்கி படிப்படியாக தற்போது, கரூரில் ஏன் தமிழக அளவில் மட்டுமில்லாமல், இந்திய அளவில் உள்ள பல்வேறு மாநில மாடுகளை வளர்த்து வருகின்றார். சுமார் *180*-க்கும் மேற்பட்ட மாடுகளை தன்னுடைய பண்ணை இடமான மண்மங்கலம் பகுதியை அடுத்த வரப்பாளையம் பகுதியில் அமைந்துள்ள ஒரு ஷெட்டில் வளர்க்கும் இவருக்கு, பொழுதுபோக்கு என்பது மாடுகளை பராமரிப்பது தான். ●

## குழுமம் குப்புசாமி கூறிய இந்திய பசும்பாலின் நன்மைகள்......

**இந்திய** பசுவின் பால் பல பயனுள்ள நன்மைகளை தருகின்றது என்று கூறிய குழுமம் குப்புசாமி அப்படியே நீண்ட வரிசையில் கூறி கொண்டே சென்றார், "பால் உடலுக்கு உகந்த உணவு, அதில் உணவுசத்துக்கள் அதிகம் நிறைந்துள்ளது. உடலை வளர்க்கக் கூடிய புரோட்டீன், எலும்புகளை உறுதி செய்யும் தாதுப்பொருட்கள், ஆரோக்கியத்திற்கான வைட்டமின்கள், சக்தி தரும் லேக்டோஸ், கொழுப்பு மற்றும் தேவையான அமிலங்களை ஜீரணிக்கும் வகையில் தருகின்றது. மேலும் பாலில் உள்ள கால்சியம், எலும்புகளின் ஆரோக்கியத்தையும், ரத்தம் கட்டிக் கொள்வதையும் நரம்புகளின் செயல் பாட்டையும், தசைகள் சுருங்குவதையும், ரத்த அழுத்தத்தையும், சமமாக வைத்துக் கொள்வதிலும் துணையிருந்து உடலை பாதுகாக்கின்றது. பாலில் உள்ள புரோட்டீன்கள் மூளை வளர்ச்சிக்கும், உடலில் உள்ள செல்கள் வளர்வதற்கும் உறுதுணையாக இருக்கின்றது. வைட்டமின் ஏ கண்கள் மற்றும் தோலில் உள்ள ஆரோக்கியத்தையும், உடலில் உள்ள செல்கள் வளர்வதற்கும் உறுதுணையாக இருக்கின்றது." என்று அடுக்கிக் கொண்டே சென்றார்.

இவர்களின் வயதையோ, தோற்றத்தையோ, ஏழ்மையான சுற்றுப்புறத்தையோ நாகரீகமில்லாத பேச்சையோ, கிராமிய ஆடைகளையோ, சமுதாயம் அவர்களுக்கு விதித்துள்ள கட்டுப்பாடுகளையோ பார்க்க வேண்டாம்.

அவர்களுடைய ஆர்வம், விடா முயற்சி, தன்னம்பிக்கை ஆகியவற்றால் வயதையும் பொருட்டாகக் கொள்ளாது, லட்சியத்தில் வெற்றி பெற்ற இவர்களைப் பாராட்டுங்கள்.

பீகார் மாநில தலைநகரம் பாட்னாவிலிருந்து 15 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள ஒரு கிராமம் டீப்ரா. இங்கு வசிக்கும் 12 தலித் பெண்கள் சேர்ந்து, ஒரு இசைக்குழுவை ஆரம்பித்துள்ளனர். இதிலுள்ள 61 வயதான காயத்ரி தேவி படித்தவரல்ல. ஆனால் நாட்டுப்புற இசையில் கை




# முற்றிலும் தலித் பெண்களை கொண்ட ஒரு பேண்டு இசைக்குழு!

தேர்ந்தவர் ஆவார். இவர், தன்னைப் போல படிக்காத தலித் பெண்களைச் சேர்த்து இந்த இசைக்குழு அமைத்துள்ளார்.

"இந்த குழு அமைப்பது அத்தனை எளிதாக இருக்கவில்லை." என்கிறார் காயத்ரி தேவி. "கிராமத்து ஆண்கள் மட்டுமில்லாது, பெண்களே இதை எதிர்த்தார்கள். 'ஊருக்கு வெளியே சென்று பெண்கள் எப்படி இசை நிகழ்ச்சிகள் நடத்த முடியும்? வயதான பெண்கள் இசையில் என்ன சாதிக்க முடியும்?' என்று கேட்டார்கள் சிலர்" என்று தான் சாதிக்க ஏற்பட்ட தடைகளைப் பற்றியும் விளக்கினார் அவர்.



ஆனால் காயத்ரி தேவி இதை எல்லாம் பொருட்படுத்தவே இல்லை. சமூக சேவகியான சுதா வர்கீஸ் தலித் பெண்கள்

க.வீரா

இசை கற்பதை ஊக்குவித்தார். முதலில் தலித் பெண்கள் சமுதாயத்திற்கு பயந்து தயங்கினர். ஆனால் சுதா வர்கீஸ் ஒரு நாள் இசை கற்பிப்பவரை அழைத்து வந்தார். சில பெண்கள் டிரம்ஸ் வாசிக்க கற்றனர். சிலர் நின்று வேடிக்கை பார்த்தனர். மெல்ல மெல்ல முயற்சி பயனளித்தது. ஆகஸ்ட் 2013-ல் பெண்கள் டிரம்ஸ் வாசிக்க கற்க ஆரம்பித்தனர். இப்போது 27 பேர் அடங்கிய இந்தக்




குழுவில் ஒவ்வொருவரும் ஒரு வாத்தியம் வாசிப்பதில் மிகவும் கை தேர்ந்தவராக மாறினர்.

பேண்டு குரூப்பிலுள்ள ரீட்டா (வயது 26) தனது கணவரிடம் இதற்கு அனுமதி கேட்டபோது, அவர் மிகவும் கோபம் அடைந்தாராம். ஆனாலும் இவர் தன் ஆர்வத்தைக் கைவிடவில்லை. தலித் பெண்களுக்கு இசை பயிற்றுவித்த ஆதித்யா குஞ்சன், "இது மிகவும் கடினமாக இருந்தது." என்றார். "ஏனென்றால் இவர்கள் பள்ளிக்கே செல்லவில்லை. ஆனால் இவர்களுடைய ஆர்வம் காரணமாக கற்றுக் கொடுக்க முடிந்தது. முதலில் 16 பெண்களைத் தேர்ந்தெடுத்து பயிற்சி அளிக்கப்பட்டது." என்றார் அவர். இடையே ஆதித்யாவிற்கு, "இந்த முயற்சியைக் கைவிட வில்லை என்றால், உன் உயிருக்கே ஆபத்து வரும்." என்று கொலை மிரட்டல்களும் வந்தன. 'எப்போது எந்தப் பெண்ணின் கணவன் வந்து கலாட்டாவோ, அடிதடியோ செய்வார்களோ?' என்ற பயத்துடனேயே பயிற்சி தந்தாராம் ஆதித்யா.

அது வரை வயல்களில் வேலை செய்த தலித் பெண்களின் வாழ்க்கை முறையை முன்னேற்ற நினைத்தார் சுதா வர்கீஸ். அதற்கு அவர்களுக்கு வேறு பொருள் ஈட்டும் வழிகளையும் கற்றுக் கொடுக்க நினைத்தார் இவர்.

மிகவும் யோசித்து பெண்கள் இசைக்குழு அமைக்கத் தீர்மானித்து தலித் பெண்கள், சிலரைத் தேர்ந்தெடுத்து பயிற்சியும் அளித்தார். 41 வயது மாலதி சங்கீதம் கற்றுக் கொண்டதில் இப்போது மகிழ்ச்சியாக இருக்கிறார். மாதம் முழுவதும் வயலில் வேலை செய்தாலும் சில நூறுகள் மட்டுமே கிடைக்கும். ஆனால் இப்போது 2-3 மணி நேரம் டிரம்ஸ் வாசித்தால் ரூ.500-1000 வரை கிடைக்கிறதாம் இவருக்கு.



தலித் பெண்கள் சேர்ந்து அமைத்த 'நாரீ குஞ்சன் சர்கம் மியூசிக்கல் பேண்ட்' என்ற இக்குழு பாட்னாவில் முதல் மந்திரியின் இல்லத்திலிருந்து பல பெரிய ஹோட்டல்கள் வரை நிகழ்ச்சிகள் நடத்தியிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சமுதாயம், 'எந்த வேலையை ஆண்கள் செய்யலாம், எதை பெண்கள் செய்ய வேண்டும்?' என்று பிரித்து வைத்திருக்கிறது. ஆனால் வேலையை கற்றுக் கொள்ளும் ஆர்வம் மற்றும் விடாமுயற்சி இருந்தால், எந்த வேலையையும் பெண்கள் திறமையாகச் செய்ய முடியும். இதற்கு இந்த பெண்கள் பேண்டு குழுவே சாட்சி.

இந்த பேண்டு இசைக்குழுவினர் பச்சை வண்ண புடவை அணிந்து, நிகழ்ச்சி நடத்தும் அழகே அழகு. 2 வருடங்களுக்கு முன்பு வரை வீட்டின் நான்கு சுவர்களுக்குள் அடைபட்டுக் கிடந்த பெண்கள் அலங்கரித்துக் கொண்டு இந்த நிகழ்ச்சியை நடத்துவது என்பது உண்மையிலேயே அங்குள்ள பலரை மட்டுமல்லாமல், அக்கம் பக்கத்து ஊர்களைச் சேர்ந்த பலரையும் வாயடைத்துப் போக வைத்திருக்கிறது.

இதே போல் இன்னும் தலித் பெண்கள் தங்கள் வாழ்க்கையில் முன்னேற வேண்டும். இதுவே பலரது ஆசையாகவும் உள்ளது. மேலும் இசை என்பது அனைவருக்கும் சமமான ஒன்று தானே? இந்த இசை இவருக்குத் தான் வரும், அவர்களுக்கு வராது என்று கூறுவதெல்லாம் தவறு என்பதை இந்த தலித் பெண்கள் பேண்டு குழு நிரூபித்து விட்டது. மேலும் இசை என்பது ஒருவரது ஜீனில் வருவது என்பதை இந்த பெண்கள் எடுத்துரைத்து விட்டனர். ●

## தலித் பெண்களின் அக்காவான சுதா வர்கீஸ்

**தலித்** பெண்களை ஒன்று திரட்டி இசைக்குழு அமைக்க பயிற்சி தந்ததில் சமூக சேவகியும், பத்மஸ்ரீ சுதா வர்கீஸின் பங்கு மகத்தானது. 1949-ல் கேரளாவின் கோட்டயத்தில் பிறந்த சுதா வர்கீஸ், ஒரு கத்தோலிக்க கன்யாஸ்த்ரீயும் ஆவார். 1965-ல் நோட்ரம் பள்ளியில் கல்வி கற்பிக்க பாட்னா வந்தார். பீகாரில் தலித் மக்களின் நிலையைப் பார்த்து அவர் மனம் உருகியது. எனவே இவர்களின் முன்னேற்றத்துக்காக உழைக்கத் தீர்மானித்தார்.



1987-ல் பாட்னாவிலிருந்து 12 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள தானாபூரில் 'நாரி குஞ்சன்' என்ற அமைப்பைத் தொடங்கி, தலித் பெண்கள், தலித் சிறுமிகள் ஆகியவர்கள் தங்கள் காலில் நிற்க ஏற்பாடு செய்தார். தையல், எம்ப்ராய்டரி, கைவேலை மற்றும் நர்சிங்கில் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்தார் இவர்.

இப்போது 'நாரி குஞ்சன்' என்ற அமைப்புக்கு 90 கிளைகள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இதுவரை 6,000 பெண்களுக்கு சுதா வர்கீஸ் சுயமாக சம்பாதிக்க பயிற்சி அளித்துள்ளார்.




# வாட்ஸ்அப், பேஸ்புக்கால் வந்த

க.தேவேந்திரன்

"நீ என்ன வேலை செய்கிறாய்? உன் வீடு எங்குள்ளது?" இப்படி ஒரு பெண் தன் பேஸ்புக் நண்பனின் சாட் பாக்சில் மெசேஜ் போட்டாள்.

அந்த இளைஞன் உடனடியாக இப்படி பதிலளித்தான், "நான் உன்னை மிகவும் லைக் செய்கிறேன். என் வீடு பாட்னாவில் உள்ளது? நீ எங்கு வசிக்கிறாய்?"

அந்த பெண் பதிலுக்கு இவ்வாறு மெசேஜ் அனுப்பினாள், "நான் கொல்கத்தாவில் வசிக்கிறேன். நீயும் எனக்கு மிகவும் பிடித்தமானவன்."

அந்த இளைஞன், "கொல்கத்தாவில் எங்கு வசிக்கிறாய்? நான் உன்னை சந்திக்க விரும்புகிறேன். நாம் இருவரும் ஒன்று சேர்வது எப்படி? நீயின்றி என்னால் இனி உயிர் வாழ முடியாது." என்றான் பதிலுக்கு.

உடனே அந்த பெண், "நான் ஹௌராவில் வசிக்கிறேன். நீயின்றி ஒரு வாழ்க்கையை என்னாலும் கற்பனை செய்ய முடியவில்லை." என்றாள்.

இப்படியான காதல் வசனங்கள் நிரம்பிய மெசேஜ், இரு தரப்பிலும் பரிமாறிக்கொள்ளப்பட்டது. பிறகு இருவரும் அவரவர் மொபைல் நம்பரை பெற்றுக் கொண்டு, மணிக்கணக்காக பேசத் துவங்கினர். காதல் போதை தலைக்கேறிய உடன் இருவரும் நேரில் சந்திக்க துடித்தனர். பிறகு இருவரும் ஒரு நாள் சந்தித்தனர், அவசர திருமணமும் நடந்தது. ஆனால் அதற்கு பின் அந்த பெண்ணுக்கு நடந்த கொடுமை அதிர்ச்சி ஏற்படுத்தும் ஒரு சம்பவம் ஆகும்.

மேற்கு வங்காளத்தின் ஹௌரா மாவட்டத்தைச் சேர்ந்த 22 வயது சுலேகாவுக்கு பேஸ்புக் மற்றும் வாட்ஸ்அப் மூலம் பீகாரில் வசிக்கும் ஆசிஃப் உடன் நட்பு ஏற்பட்டது.

சோஷியல் சைட் மூலம் ஆரம்பமான இவர்களுடைய காதல் கதை தீவிரமாக மாற, சுலேகா தன் பேஸ்புக் காதலனை சந்திக்க பாட்னா வந்து சேர்ந்தாள்.


மனதில் காதல் கனவுகளுடன் ஹௌராவிலிருந்து பாட்னா வந்து சேர்ந்த சுலேகாவை சந்தித்தான் அவள் காதலன். ஆசிஃப்பிடமிருந்து ஏமாற்றம் மற்றும் பிளாக் மெயிலிங் தவிர அவளுக்கு வேறு எதுவும் கிடைக்கவில்லை. காதல் பித்தாக இருந்த சுலேகா, அவனுக்கு புத்தி சொல்லி திருத்த, எத்தனையோ முயற்சி செய்தாள். ஆனால் அது நடக்கவில்லை. அவள் தனது காதலனுக்காக மதமும் மாறினாள், அப்படியும் எதுவும் அவளுக்கு நிம்மதி கிடைக்காமல் போகவே, வெறுத்துப் போய் அவள் சட்டம் மற்றும் போலீசை நாடினாள்.



சுலேகா பாட்னாவின் மகளிர் காவல்நிலையத்தில் மோசடி, தகாத உறவு மற்றும் சைபர் கிரைம் என ஆசிஃப் மீது புகார் செய்தாள். மேலும் இந்த விஷயத்தில் சுலேகா 5 இளைஞர்களையும் குற்றம் சாட்டினாள்.

அந்த பெண்ணின் புகார் பதிவு ஆனவுடன், போலீஸ் அதிரடி சோதனை செய்து, 2 இளைஞர்கள் ஆன ரிஜ்வி மற்றும் ஃபைஜை அரெஸ்ட் செய்தது.

நடந்தது இது தான். ஓட்டலில் உரையாடி விட்டு, டிபன் சாப்பிடும் போது சுலேகாவுக்கு ஆசிஃப்



# வினை!

கோல்டு டிரிங்ஸில் போதை மருந்து கலந்து கொடுத்து விட்டான். அவள் மயங்கிய பிறகு அவளுடன் பலாத்காரம் செய்தான் மற்றும் அதை வீடியோ எடுத்துக் கொண்டான். அதற்கு பின் சுலேகாவுக்கு அந்த வீடியோவை காட்டி பிளாக்மெயில் செய்யத் துவங்கினான்.

பிளாக்மெயிலிங்கால் மிகவும் நொந்து போன சுலேகா பாட்னா வந்து அந்த இளைஞனை சந்தித்து பிரச்சனையை சுமூகமாக தீர்க்க முயற்சி செய்தாள். ஆசிஃப் அவளை திருமணம் செய்து கொள்வதாக உறுதி கூறி, தன் வலையில் சிக்க வைத்தான். அவளை பாட்னாவில் காலேஜ் அருகில் உள்ள ஒரு லேடிஸ் ஹாஸ்டலில் தங்க வைத்தான். பிறகு காந்தி மைதானத்துக்கு அருகில் உள்ள பூங்காவில் பலவந்தமாக அவளுடைய மதம் மாற்றி நிக்காஹ் செய்து வைக்கப்பட்டது.

நிக்காஹ் முடிந்த பின் இருவரும் என்ஐடிக்கு அருகில் நஃபீஸ் காலனியில் வசிக்கத் துவங்கினர். சுலேகாவுக்கு, 'அவன் திருந்தி விட்டான், இனி வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்கும்.' என்ற எண்ணம் வந்தது.

சில நாட்கள் வரை எல்லாம் சரியாக நடந்தது. ஆனால் *15-16* நாட்களுக்கு பின் ஆசிஃப், தன் பழைய நிலைமைக்கு வந்து விட்டான். நிக்காஹ் நடந்த *25* நாட்களுக்குப் பிறகு, திடீரென ஆசிஃப் காணாமல் போய் விட்டான். அவன் தன் மொபைல் போனையும் சுவிட்ச் ஆஃப் செய்து விட்டான்.

சுலேகா *5* நாட்கள் வரை தன் கணவனான ஆசிஃப் திரும்பி விடுவான் என எதிர்பார்த்து காத்திருந்தாள். ஆனால் அவன் பல நாட்கள் வரை திரும்பாமல் போகவே, அவள் ஆசிஃப் உடைய ஃபுல்வாரி ஷரீஃப் வீட்டுக்கு சென்றாள்.

முதலில் அவன் குடும்பத்தினர் சுலேகாவை அவமானப்படுத்தினர். ஆனால் அவளோ, "ஆசிஃப்பை பார்க்காமல் போக முடியாது என்றும், அங்கு தான் தங்குவேன்." என பிடிவாதம் பிடித்த போது, ஆசிஃப்-ன் அண்ணன் தன் நண்பனின் வீட்டில் வாடகைக்கு அவளை குடி இருக்க ஏற்பாடு செய்தான்.

சுலேகா போலீசாரிடம் மேலும் கூறினாள், "அதற்கு பிறகு நான் சரியாக இஸ்லாம் மதத்தை பின்பற்றவில்லை எனக் கூறி கேவலப்படுத்தினர் ஆசிஃப் குடும்பத்தினர். 'நன்றாக இஸ்லாம் மதம் பற்றி தெரிய வேண்டும்.' என என்னை ஒரு பள்ளி வாசலில் சேர்த்து விட்டனர். அங்கும் சிலர் என்னுடன் தவறாக நடந்து கொண்டனர். நான் கர்ப்பமாகி விடவே பலவந்தமாக அபார்ஷன் செய்யப்பட்டது."

பிறகு நீதிமன்றத்தில் சுலேகா தன்னுடைய வாக்குமூலத்தை பதிவு செய்தாள். ஆசிஃப் மற்றும் அவனுடைய நண்பர்களுக்கு எதிராக ஒருவரின் மதத்தை கேவலப்படுத்தியதற்காக *295/ஏ*, அபார்ஷன் செய்து வைத்ததற்காக *313*, அடிதடி வன்கொடுமைக்காக *323*, அடைத்து வைத்ததற்காக *344*, பலாத்காரம் செய்ததற்காக *376*, போதை மருந்து கொடுத்ததற்காக *328*, கொலை மிரட்டலுக்கு *387*, மோசடி குற்றம், *420*, ஏமாற்றி திருமணம் செய்ததற்கு *496* மற்றும் மிரட்டலுக்கு *506* பிரிவுகள் கீழ் கேஸ் பதிவு செய்யப்பட்டது. இதனால் இப்போது ஆசிஃப் மற்றும் அவன் நண்பர்கள் ஜெயிலில் கம்பி எண்ணிக் கொண்டிருக்கின்றனர்.

ஆகவே இளைஞர்கள் மற்றும் இளம் பெண்கள் பேஸ்புக், வாட்ஸ்அப் போன்றவற்றை பயன்படுத்தும் போது, அறிமுகமில்லாத நபர்களிடம் அளவுக்கு அதிகமாக சாட் செய்வதை தவிர்க்க வேண்டும். ●

## பேஸ்புக் காதலால் நிகழ்ந்த மற்றொரு சோகம்

**பீகாரின்** பாகல்பூர் நகரத்தில் வசிக்கும் சீமா (பெயர் மாற்றப்பட்டுள்ளது) பனாரஸ் சேத்கன்ஜின் இன்டர் காலேஜில் படித்து வந்தாள். படிக்கும் போது பேஸ்புக் மூலம் ரோஹித் என்ற இளைஞனுடன் அவளுக்கு நட்பு ஏற்பட்டது. அவன் பனாரஸின் லோஹரியா கிராமத்தில் வசிப்பவன்.

பேஸ்புக் மூலம் ரோஹித் சீமாவிடம் தான், 'மனமோகினி' என்ற பெயரில் ஒரு திரைப்படம் தயாரிப்பதாக கூறினான். அதில் சீமாவை கதாநாயகியாக்குவதாக பேராசை காட்டினான். பிறகு இருவருக்கும் நடுவில் சாட்டிங் ஆரம்பமானது. மெல்ல இருவருக்கும் நடுவில் நெருங்கிய தொடர்பு ஏற்படவே, ஒரு நாள் ரோஹித்தை நேரில் சந்திக்க அவள் வந்து விட்டாள்.

ரோஹித் 'ஸ்கிரீன் டெஸ்ட்' என்ற சாக்கில் அவளுடைய உடலை தடவிய பின் அவளை இறுக அணைக்க முயன்றான். சீமாவுக்கு அவன் செயல் பிடிக்காமல் போகவே அவள் கிளம்பினாள். ரோஹித், "சினிமாவில் நடிக்க விரும்பினால், இதெல்லாம் சகஜம், அங்கு பல விஷயங்களை பொறுத்துக் கொள்ள வேண்டும், அனைவரையும் அனுசரித்து நடக்க வேண்டும்." எனக் கூறினான். பாட்னாவில் ஷூட்டிங் உள்ளதால், அங்கு வந்து தன்னை சந்திக்கும்படி சொன்னான்.

பாட்னா செல்லும் முன் அவனிடம் பேசிய சீமா தங்குவதற்கான விலாசம் கேட்டாள். ரோஹித் ஒரு ஓட்டலின் பெயரை கூறவே சீமா அங்கு சென்று தங்கினாள். சீமாவுக்கு எதுவும் தெரியவில்லை அந்த அளவு ஆழமான நித்திரையில் ஆழ்ந்தாள். சிறிது நேரத்தில் ரோஹித் அந்த அறைக்கு வந்து, அவளுடன் பலாத்காரம் செய்த பின், அதை வீடியோ படமாக்கினான்.

"இதை பற்றி யாரிடமாவது கூறினால் ப்ளூ ஃபிலிம் இன்டர்நெட்டில் போடுவதாக" மிரட்டினான் ரோஹித். சீமா அழுது புலம்பியபடி பனாரஸ் திரும்பினாள். சீமாவின் பிரச்சனைகள் இங்கு முடியவடையவில்லை. அடிக்கடி ரோஹித் போன் செய்து, பல இடங்களுக்கு அவளை வரும்படி கூறி மிரட்டினான். சீமா அவன் கூறியதை கேட்கவில்லை. அதனால் அவளுடைய படத்தை இன்டர்நெட்டில் போட்டு விட்டான். பிறகு சீமாவுக்கு இதை பற்றி கூறி விட்டான்.

உடனே சீமா சேதன்கன்ஜ் காவல்நிலையத்தில் ரோஹித்துக்கு எதிராக வழக்கு பதிவு செய்தாள். போலீஸ் ரோஹித்தை வாரணாசி கெண்ட் ஸ்டேஷனில் கைது செய்தது. ரோஹித் ஜெயில் வாசம் அனுபவிக்கிறான். போலீஸ் அவனுடைய பழைய ரெக்கார்டை தோண்டுவதில் இப்போது ஈடுபட்டுள்ளது.




# தினமும் ராசிபலன் பார்ப்பவரா நீங்கள்?

ம.நாராயணன்

இந்த நாட்டிலுள்ள பலர் படித்து முன்னேற்றம் அடைந்திருந்த போதிலும், இன்னமும் அவர்கள் மூடநம்பிக்கைகளில் சிக்கி டிவி சேனல்கள், ஜோசியர்கள் கூறும் எதிர்கால பலன்களை நம்புவது தான் கொடுமையான விஷயம்.

இதைப் பற்றி 30 வயதான ஒரு வேலையில்லா பட்டதாரி இளைஞனிடம் கேட்ட போது, "ஒரு தனியார் நிறுவனத்தில் எனக்கு வேலை கிடைப்பது உறுதி ஆயிற்று. ஆனால் டிவி சேனலில் அன்று கூறப்பட்ட ராசி பலனை பார்த்து விட்டு, அன்று நான் கடைசி சுற்று இன்டர்வியூவுக்கு செல்லவில்லை. அன்று ராசி பலன் கூறியவர், அன்று எனக்கு மிகப் பெரிய விபத்து நேர இருப்பதாகவும், வெளியே செல்ல வேண்டாம்." என்று கூறினார்.

இதைப் பற்றி என் தாயிடம் ஆலோசனை கேட்ட போது அவரும், 'இன்டர்வியூவுக்கு நீ போக வேண்டாம்.' என்று கூறிவிட்டார். சார், அன்று மட்டும் அந்த டிவி சேனலில் அந்த ராசி பலனை கேட்காமல் இருந்திருந்தால், இப்போது நல்ல வேலையில் இருந்திருப்பேன். ஆகவே இப்போது நான் அந்த ராசி பலன் நிகழ்ச்சியை பார்ப்பதை அடியோடு விட்டு விட்டேன்." என்றான் சோகத்துடன்.

இதே போன்ற ராசி பலன் எனும் மூடநம்பிக்கையில் சிக்கிய 30 வயது இளைஞனுக்கு சமயத்தில் சிகிச்சை கிடைக்காமல் பரிதாபமாக இறந்தான். அந்த இளைஞனுக்கு திடீரென உடல்நிலை பாதிக்கப்பட்டது. அவனுடைய பெற்றோர் அவனை மருத்துவமனைக்கு அழைத்து செல்ல முடிவெடுத்தனர். அதே சமயம் அவனுடைய குடும்ப ஜோசியரிடம், 'அவனுடைய கிரஹ நிலைகள், எப்படி உள்ளது?' என விசாரித்த போது அவர், "அவனுக்கு அன்றைய தினம் மிகவும் மோசமாக உள்ளது மற்றும் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றால் மரணம் ஏற்படும். அதனால் வீட்டிலேயே வைத்திருந்து ஏதாவது மந்திரம் படித்து பூஜை செய்து கொள்ளுங்கள்." எனக் கூறினார்.

ஜோசியரின் அந்த ஆலோசனையை ஏற்றுக் கொண்ட பெற்றோர், அதே போல செய்தனர். ஆனால் சிறிது நேரத்திலேயே மாரடைப்பு ஏற்பட்டு அந்த இளைஞன் இறந்து போனான்.

இதைப் போல மூடநம்பிக்கை காரணமாக ஒரு வாலிபன் விபத்து நடந்து காய முற்றிருந்த பெற்றோரிடம் சரியான சமயத்துக்கு வந்து சேராமலிருந்த காரணமாக, மிகவும் மோசமான நிலை ஏற்பட்டது. அவனுக்கு பெற்றோருக்கு நடந்த விபத்து பற்றிய செய்தி கிடைத்தவுடன் அங்கு செல்வதற்காக கிளம்பினான். ஆனால் அவன் மனைவி, "அன்று அந்த திசையில் சூலம் இருப்பதால் பயணம் செய்வது ஆபத்து." எனக் கூறி தடுத்து விட்டாள். மனைவி கூறியதை ஒப்புக் கொண்டு மறுநாள் செல்ல முடிவு செய்தான் அவன். மறுநாள் இரவு அவன் அங்கு சென்ற போது, அவனுடைய பெற்றோர் சரியான நேரத்துக்கு சிகிச்சை தரப்படாததால் இறந்து விட்டிருந்தனர்.

திசைகளில் சூலம் மற்றும் ராசி பலன் என்பது பொதுவாக கூறப்படுவது. மக்கள் அனாவசியமாக அவற்றை டிவியில் பார்த்து, கேட்டு மிகவும் அவசியமாக செய்ய வேண்டிய காரியங்களையும் தள்ளிப் போடுவதாலும், செய்யாமல் இருப்பதாலும் விளைவுகள் இப்படி அவர்களுக்கே பாதகமாக முடிகிறது.

அதே போல, "ஒருவர் ராசியில் அன்று தன லாபம்." எனக் கூறப்படுகிறது என்றால், அதே ராசியில் பிறந்த அனைவருக்கும் பணம் கிடைக்குமா என்ன? நாம் அனைவரும் ராசிபலன், எதிர் காலத்தைப் பற்றிய ஜோசியத்தை நம்பி செயலில் இறங்குவதற்குப் பதிலாக தங்கள் வேலையை நேர்மையாக, உண்மையாக, கடின உழைப்புடன் செய்தால் அதற்கான பலனும் சிறப்பாகவே இருக்கும்.

அதனால் ராசிபலன் மீது நம்பிக்கை வைப்பதற்குப் பதிலாக, தங்கள் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள். உங்கள் செயல் சரியாக இருந்தால், எல்லா நாளும் நல்ல நாளே. மேலும் உங்கள் நேர்மையான உழைப்புக்கேற்ற பலன் என்பது ஒரு நாள் நிச்சயம் கிடைக்கும். ●

# பாயசம்!



க.சந்திரன்

அவள் சிறியவளாக இருந்த போது அம்மா அவளிடம், “அவளது தந்தை வெளிநாட்டில் இருப்பதாகவும், அவர் வரும் போது அவளுக்காக நிறைய பொருட்கள் வாங்கி வருவார்.” என்று கூறுவாள்.

ஆனால் சியாமளா இன்று பெரியவளாக வளர்ந்து விட்டாள். பள்ளிக்கும் சென்று கொண்டிருக்கிறாள். அவள் தன் அம்மாவிடம், “அம்மா, அப்பா ஏன் இங்கு வரவே மாட்டேன் என்கிறார், அவரிடமிருந்து போனும் வருவதில்லையே ஏன்?” எனக் கேட்க ஆரம்பித்து விட்டாள்.

அதற்கு அவளது தாய் மஞ்சுளா, “அம்மா உனது தந்தை மிகவும் உத்தமமானவர். அவர் நம்மிடம் மிகுந்த அன்பு கொண்டுள்ளார். ஆனால் அவருக்கு வேலை செய்யும் இடத்தில் லீவு கிடைக்காததால், அவரால் நம்மை வந்து பார்க்க முடியவில்லை.” என்று கூறி சமாளித்தாள்.

அம்மாவின் பதில் ஆறுதலை தந்தாலும், சியாமளாவுக்கு தனது தந்தையின் நினைவுகள் சிந்தனையிலிருந்து அகலவில்லை. சியாமளா இப்போது 5-வது படித்துக் கொண்டிருந்தாள்.

ஒரு நாள் அவள் பள்ளியிலிருந்து வெளியே வந்த போது, ஒரு பையன் தன் அப்பாவிடம் ஓடிச் சென்று அவரது கழுத்தைக் கட்டிக் கொள்வதை கண்ட சியாமளாவுக்கு தனது தந்தையின் நினைவு வந்து விட்டது. எனவே அவள் நேராக வீட்டுக்குச் சென்றதும் எதுவும் பேசாமல் கட்டிலில் போய் படுத்துக் கொண்டாள்.

அடுப்படி வேலைகளை முடித்துவிட்டு வந்த மஞ்சுளா கைகளைத் துடைத்துக் கொண்டு மகள் அருகில் சென்று அமர்ந்து, அவளது கரிய கூந்தலைக் கோதியவாறே, ‘இன்று என் செல்லத்திற்கு என்ன கோபம்?” எனக் கேட்டாள்.

சியாமளாவோ படக்கென்று, “அம்மா, நீங்கள் ஏன் என்னிடம் பொய் கூறுகிறீர்கள்? அப்பா ஒன்றும் துபாயில் இல்லை. அப்படி இருந்தால் நிச்சயம் போன் செய்திருப்பார்.” கூறினாள்.

இப்போது மஞ்சளாவிற்கு உண்மையை மறைப்பது மிகவும் கஷ்டமாயிற்று. எனவே அவள், “சரி முதலில் சாப்பிடு. பிறகு உன்னிடம் அனைத்தையும் கூறுகிறேன்.” என்றாள்.

“இப்போதே அப்பாவைப் பற்றி அனைத்தையும் கூறுங்கள் நான் சாப்பிட்டுக் கொண்டே கேட்கிறேன்.” என்றாள் சியாமளா.

“மகளே, உனது தந்தை ஒரு என்ஜினீயர். அவர் துபாயில் வேலை பார்த்து வந்தார். நானும் அவருடன் வாழ்ந்து வந்தேன். 12 வருடங்களுக்கு முன் நிகழ்ந்த சம்பவம் இது. நானும் அவரும் துபாயிலிருந்து இந்தியா வந்தோம். நாங்கள் இருவரும் மகிழ்ச்சியாகவே வாழ்ந்தோம். திடீரென்று இங்கு இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் சண்டை

**“தனது சிறு வயது முதல் தன்னுடைய தந்தையை பார்க்கவில்லை சியாமளா. காரணம் அவள் அப்பா சிறையில் இருந்தது தான். அவர் ஏன் சிறைக்கு அனுப்பப்பட்டார் தெரியுமா?”**

வந்தது. அப்போது உனது தந்தையின் பெயரையும் சில போலீசார் தீவிரவாதிகள் லிஸ்டில் சேர்த்து விட்டார்கள். இங்கு பாம் வெடிப்பதற்கு, அவர் 'மாஸ்டர் மைன்டாக இருந்தார்.' எனக் கூறி சிறையில் அடைத்து விட்டனர். கடந்த 12 வருடங்களாக உன் தந்தை இங்கு சிறையில் தான் உள்ளார்." என்று கூறிய மஞ்சளா விம்மி விம்மி அழத் துவங்கினாள். சியாமளாவோ பெரிய மனுஷி போல, "நான் இப்போது அவரை பார்க்கலாமா?" எனக் கேட்டாள்.

"நிச்சயமாக, நான் ஒவ்வொரு ஞாயிறு அன்று உனது தந்தையைக் காண ஜெயிலுக்குச் சென்று வருகிறேன். இம்முறை நீயும் என்னுடன் வரலாம்." என்றாள் மஞ்சுளா.

ஒரு 12 வயது சிறுமி தன் முன்னே வந்தது நின்றதும், சியாமளாவின் தந்தையான ஹஃபீஸ் தனது முகத்தை மறைத்துக் கொண்டார். ஒரு குற்றவாளியாக தான் அவள் முன் நிற்பதை அவர் விரும்பவில்லை.

"அப்பா, நீங்கள் உண்மையில் குற்றவாளியா?" என சியாமளா கேட்டாள்.

"உனது அப்பா நிச்சயம் குற்றவாளியில்லை. ஆனால் விதி இப்படி விளையாடி விட்டது." என்று கூறியவாறே மஞ்சுளா ஹஃபீஸைப் பார்த்தாள்.

"அப்பா உலகிற்கு வேண்டுமானால் நீங்கள் குற்றவாளியாக இருக்கலாம். ஆனால் உங்கள் மகள் உங்களை நிரபராதி என்றும் தேச பக்தர் என்று தான் எண்ணுவாள்." என்றாள் சியாமளா.

பிறகு இப்போதெல்லாம் சியாமளா தன் தாயுடன் ஒவ்வொரு ஞாயிறு அன்றும், தன் தந்தையைக் காண சிறைக்கு செல்கிறாள். ஒவ்வொரு முறையும் அவருக்குப் பிடித்தமான உணவுப் பண்டங்களை எடுத்துச் சென்று, தன் கையாலேயே ஊட்டி விடுவாள். கிட்டதட்ட பல ஆண்டுகள் தந்தை மகள் உறவு இப்படி கடந்தது. இப்போது சியாமளா 20 வயது யுவதி. கல்லூரில் படித்துக் கொண்டிருந்தாள்.

ஹஃபீஸ் சிறையில் படிக்காத கைதிகளுக்கு படிப்பு சொல்லித் கொடுத்தார். நோயால் வாடுபவர்களுக்கு உதவுவார். இப்படி பல சேவைகளில் 22 வருடங்களாகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

அவர் சில நாட்களில் தூக்கிலிடப்பட இருந்தார். சியாமளாவும், மஞ்சளாவும் ஹஃபீஸை இறுதிமுறை பார்ப்பதற்காக சென்றனர் கண்ணீருடன்.

"அப்பா, என் கையால் செய்த பாயசத்தை கடைசியாக சாப்பிடுங்கள்." என சியாமளா தன் கையாலேயே அவருக்கு அதை ஊட்டி விட்டாள். 2 கரண்டி சாப்பிடும் முன்பே ஹஃபீஸின் முகபாவம் மாறியது. வாயிலிருந்து ரத்தம் வழிய ஆரம்பித்தது. அதை பார்த்ததும் மஞ்சுளா பயந்து போனாள். ஆனால் சியாமளாவோ, "அப்பா, உங்களை நிரபராதி என நிரூபிக்கத்தான் முடியவில்லை. ஆனால் குறைந்த பட்சம் உங்களைத் தூக்கு தண்டனையிலிருந்து காத்து விட்டேன். இப்போது உலகம் தீவிரவாதி ஹஃபீஸ் தேசத் துரோகத்திற்காகத் தூக்கிலிடப்பட்டார் எனக் கூறாது." எனக் கூறியவாறே தானும் அந்த பாயசத்தை உண்டு விட்டாள்.

அங்கு ஓடி வந்த காவலர்களால் இரண்டு பிணங்களைத் தான் அங்கு காண முடிந்தது. ●



**கலக்கல் கார்னிவல்:** நமக்கு கார்னிவல் என்றதும் நினைவுக்கு வருவது பிரேசிலின் சாலைகளில் நடக்கும் கார்னிவல் கலை நிகழ்ச்சிகள் தான். ஆனால் பிற நாடுகளிலும் இப்படிப்பட்ட கார்னிவல்கள் நடக்கவே செய்கின்றன.

ஸ்பெயினின் கனரி தீவில் நடந்த இத்தகைய ஒரு கார்னிவலின் காட்சி தான் இது. அதில் வண்ணமிகு உடைகள் அணிந்தபடி நடனக்கலைஞர்கள் நடனமாடியபடி ஊர்வலம் சென்றனர். ஒரு மாதத்துக்கும் மேலாக நடக்கும் இந்த கார்னிவலில், இளம் ஜோடிகளை அதிகமாக காண முடியும்.







# உன் கொழுந்தியாளும் உனக்கு ஒரு குழந்தையே!

சுகன்யாவுடன் எனது திருமணம் நிகழ்ந்து 2 வருடங்கள் ஓடி விட்டன. அவளது இளைய சகோதரி ஆஷா, அப்போது 16 வயது பெண்ணாக இருந்தாள். அவள் சுகன்யாவை விட அழகு மற்றும் அறிவு கூர்மை மிக்கவள். சுகன்யாவை திருமணம் செய்யும் முன், ஆஷாவை பார்த்திருந்தால், அவளைத் தான் நான் திருமணம் செய்து கொண்டிருப்பேன்.

"கொழுந்தியாள் என்பவள் அரை பொண்டாட்டி." என சிலர் கூறுவார்கள். அதை என் நண்பர்களும் என்னைத் தூண்டுவதற்கு பயன்படுத்தினர்.

ஆஷாவும் அடிக்கடி என்னிடம், "நீங்கள் மிகவும் ஹேண்ட்ஸமாக இருக்கிறீர்கள். என் அக்கா உங்களைத் திருமணம் செய்யும் முன்பு பார்த்திருந்தால், நான் உங்களைத் தட்டிக் கொண்டு சென்றிருப்பேன்." என்று கூறுவாள்.

நானும், 'நேரத்தை தவற விடக் கூடாது.' என்று நினைத்தபடி, "ஏன் இப்பொழுது என்ன குறை?" என்று கூறுவேன்.

இதை ஆஷா சீரியஸாக எடுத்துக் கொண்டாளா? அல்லது வேடிக்கையாக எடுத்துக் கொண்டாளா? என்பது எனக்கு தெரியவில்லை. ஆனால் என் மனதில் அவள் கூறியது, அப்படியே பதிந்து விட்டது.

என் மனைவி சுகன்யா என் தேவைகள் அனைத்தையும் கவனித்துக் கொண்டாள். 'அப்புறம் ஏன் என் மனது ஆஷாவிற்காக ஏங்குகிறது?' என நினைத்தேன் நான். நான் ஒருமுறை அவளுக்கு போன் செய்து, "இவர்களிடம் ஏதாவது கூறிவிட்டு மும்பை வருகிறேன்." என்றேன்.

ஆனால் அவளோ, "அது சந்தேகத்திற்கு இடமாகும். என் அம்மா, அப்பா தவறாக நினைப்பார்கள். ஆகையால் நானே சென்னைக்கு நேரம் கிடைக்கும் போது வருகிறேன்." என்று கூறினாள்.

இப்படியே 2 ஆண்டுகள் ஓடி விட்டன. இப்போது திடீரென போன் செய்த ஆஷா, "மாமா, எனக்கு, 'உங்களைப் பார்க்க வேண்டும்.' போல் உள்ளது." என்றாள்.

இதனால் எனது மகிழ்ச்சி வானத்தை எட்டியது. ஒரு வாரம் கழித்து ஆஷா சென்னைக்கு வந்து சேர்ந்தாள். இப்போது ஆஷா கல்லூரி சென்று கொண்டிருக்கிறாள். கோடை லீவில் இங்கு வந்திருக்கிறாள். அவளை அழைத்து வருவதற்காக, நான் மட்டும் ரயில்வே ஸ்டேஷன் சென்றேன். அவளது அழகு மேலும் கூடியிருந்ததைக் கண்டு, நான் மிகவும் அசந்து போனேன்.

"முன்னை விட இப்போது மிகவும் அழகாய் இருக்கிறாய்." என்றேன் நான்.

"புகழ்ந்தது எல்லாம் போதும் முதலில் வீட்டிற்குச் செல்வோம்." என்றாள் ஆஷா புன்னகையுடன்.

க.ராமன்

வீட்டிற்குச் சென்ற பின் அவளை தனியே சந்திக்கும் வாய்ப்பு எனக்கு கிட்டவில்லை. அவள் தன் சகோதரியுடனேயே ஒட்டிக் கொண்டிருந்தாள். எனக்கு இரவு முழுவதும் உறக்கம் வரவில்லை. ஆனால் அவளது நினைப்பே எனக்கு சுகமாக இருந்தது. இரவு முழுவதும் விழித்திருந்ததால், என் கண்கள் மறுநாள் கோவைப்பழம் போல் ஆகி விட்டன. காலை அறையை விட்டு வெளியே வந்த போது, அன்று ஆஷா




**"சுகன்யாவின் கணவனான அசோகனுக்கு தன் கொழுந்தியாளான ஆஷா மீது ஒரு கண் இருந்தது. ஆனால் அந்த நினைப்பையே தவிடுபொடி ஆக்கும் விதத்தில், ஆஷா ஒரு செயலை செய்தாள். அப்போதாவது அசோகன் திருந்தினானா? இல்லையா?"**

எதிர்ப்பட்டாள்.

"என்ன மாமா? இரவு முழுவதும் தூங்காமல் கண்கள் சிவந்து விட்டனவா?" என வினவினாள் அவள்.

"தூக்கம் வரவில்லை." என்றேன் நான்.

"ஏன்?" எனக் கேட்டாள் அவள்.

"இரவு முழுவதும் உன் நினைப்பு தான்."

"ஏன் என்னை இப்படி சதா எந்நேரமும் நினைத்து கொண்டிருந்தீர்கள்?"

"இதோ பார், ஆஷா. ஒன்றும் தெரியாதது போல் பேசாதே. 'எனக்கு என்ன வேண்டும்' என்று உனக்கு நன்றாகத் தெரியும். எனக்கு வேண்டியது கிடைக்கும் வரை என்னால் அமைதியாக இருக்க முடியாது." என்றேன் நான்.

நான் அவள் கைகளை பற்ற முயன்ற போது, அவள் மின்னலென ஓடி மறைந்து விட்டாள்.

2 நாட்களுக்குப் பின் சுகன்யாவின் உடல்நலம் சிறிது குன்றியது. அவள் ஆஷாவை உணவு சமைக்குமாறு கூறினாள். 'வாய்ப்பு கிடைத்ததென்று' நான் சமையலறைக்குச் சென்றேன். அங்கு ஆஷா உணவு சமைப்பதில் பிஸியாக இருந்தாள். அவள் பின்னே சென்று அப்படியே அணைத்துக் கொண்டேன். சட்டென விலகிய அவள், "அக்கா பார்த்தால் என் பிழைப்பு கந்தலாகி விடும்." மேலும் அவள், "அக்கா நன்றாக ஆழ்ந்து தூங்க தூக்க மாத்திரை வாங்கி வாருங்கள். பாலில் கலந்து கொடுத்து விடலாம்." என்றும் கூறினாள்.

இரவு உணவு முடிந்ததும், நான் எனது அறைக்கு சென்று கட்டிலில் படுத்துக் கொண்டேன். சுகன்யா 10 மணிக்கு வந்து படுத்தாள். சிறிது நேரத்திற்கெல்லாம் சுகன்யா நன்றாக உறங்கி விட்டாள். காரணம் அவள் நான் தூக்க மாத்திரை கலந்து கொடுத்த பாலை அல்லவா குடித்திருந்தாள்?

நான் மெல்ல எழுந்து, 'என் அம்மா உறங்கி விட்டார்களா?' என்று பார்க்க, அவர்கள் அறைக்குச் சென்றேன். என் அம்மாவும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார்.

நான் ஆஷாவின் அறைக்குச் சென்ற போது, இரவு 11 மணி ஆகி விட்டது. ஆஷா என்னை எதிர்பார்த்து காத்துக் கொண்டிருந்தாள். "அக்கா நன்றாக உறங்கி விட்டார்களா?" என கிசுகிசுத்தாள் ஆஷா.

"அவள் ஆழ்ந்து உறங்குகிறாள்." என்றேன் நான் மெதுவான குரலில்.

திடீரென நான் அவளிடம், "இன்று நம்மிடையே நடப்பதை நீ உன் அக்காவிடம் மறந்தும் கூறக்கூடாது." என்றேன்.

"சொன்னால் என்ன?" என்றாள்.

"முட்டாளா நீ? இந்த விஷயம் மட்டும் உன் அக்காவுக்கு தெரிந்தால், அவள் உன்னையும் விட்டு வைக்க மாட்டாள், என்னையும் விட்டு வைக்க மாட்டாள்." என்றேன். மேலும், "உனது பேரும் கெட்டு விடும்." என்றேன்.

"அப்படியென்றால் என்னுடன் ஏன் இப்படி தவறாக நடந்து கொள்ள விரும்புகிறீர்கள்?" என்று கேட்டாள் ஆஷா.

"ஊருக்குள், 'கொழுந்தியாள் என்றால் அரை பொண்டாட்டி' என்று கூறுகிறார்கள் அல்லவா? அதற்காகத் தான்." என்றேன்.

"நான் இதோ பாத்ரூம் சென்று விட்டு வந்து விடுகிறேன்." என்று வெளியே சென்றாள். ஆஷா. அந்த அறை இருளில் மூழ்கியிருந்தது.

அவள் திரும்புவதற்காக காத்திருந்தேன். சிறிது நேரத்தில் உள்ளே வந்த ஆஷா, கதவை சாத்தி தாளிட்டாள். கட்டிலில் வந்து அமர்ந்தாள். என் மனம் மகிழ்ச்சியில் துள்ளியது. 2 வருட கனவு இப்போது நிறைவேறப் போகிறதே. பிறகு அவளே லைட்டை ஆன் செய்தாள். அப்போது தான், 'என்னுடன் இருந்தது ஆஷா இல்லை, என் மனைவி சுகன்யா' என்று.

வெட்கத்தால் தலை குனிந்தேன் நான். 'ஆஷா என்னை விட சிறியவள் என்றாலும், எனக்கு சரியான பாடம் கற்றுத் தந்து விட்டாள்.' என்று நினைத்து அவமானப்பட்டேன் நான். ஆனால் அன்று முதல், 'கொழுந்தியாள் என்பவளும் தமக்கு ஒரு குழந்தை போலத் தான்' என்பதை அமல்படுத்த ஆரம்பித்தேன். ●



# வைராக்கியம் பிடித்த தயாளன்!

ம.ரவி

**"தயாளனின் இளைய மகனான தினேஷ் ஒரு தலித் பெண்ணை திருமணம் செய்து கொள்ள நினைத்தான். இது பற்றி அவருடைய மூத்த மகனான சுபாஷ் எவ்வளவு எடுத்துச் சொல்லியும், அவர் இந்த திருமணத்துக்கு சம்மதிக்கவே இல்லை. பிறகு என்ன நடந்தது?"**

"அப்பா....."

"என்ன விஷயமப்பா சுபாஷ்?" என்று கேட்டார் அப்பா.

"தினேஷ், 'அந்த தலித் பெண்ணைத் தான் கல்யாணம் செய்து கொள்வேன்.' என்கிறான் அப்பா."

"என்ன? அவன் அந்த தலித் பெண்ணைத் தான் திருமணம் செய்து கொள்வானா?" என்று கோபமாய் கேட்டார் சுபாஷின் அப்பாவான தயாளன். "நம் சாதியில் அவன் திருமணம் செய்து பொண்ணா இல்லை? போயும் போயும் ஒரு தலித் பெண்ணை மணந்தால், நம் சாதி ஜனம் நம்மைப் பற்றி கேவலமாகப் பேச மாட்டார்களா?" என்று கோபமாகக் கேட்டார் அவர்.

"அந்தப் பெண்ணான சரிதா நம்ம தினேஷ் வேலைப் பார்க்கும் பள்ளியிலேயே, ஒரு ஆசிரியையாக வேலை பார்க்கிறாள். அவளுடைய அப்பாவுக்கு சொந்தமாக ஷூ தயாரிக்கும் ஃபேக்டரியும், அரிசி மில்லும் கூட இருக்கிறதாம்." என்றான் சுபாஷ்.

"எவ்வளவு பணம் இருந்தாலும், ஒரு தலித் பெண் இந்த வீட்டு மருமகளாக வர, நான் ஒரு நாளும் சம்மதிக்கவே மாட்டேன். நீ அவனுக்கு நேரம் பார்த்து எடுத்துச் சொல்லு."

"நான் எவ்வளவோ சொல்லியும், அவன் கேட்பதாக இல்லை." என்றான் சுபாஷ்.

தயாளனுக்கு இரண்டு மகன்கள். அவர்கள் சுபாஷ் மற்றும் தினேஷ். சுபாஷுக்கு தங்கள் சாதியிலேயே ஒரு நல்ல பெண்ணை பார்த்து திருமணம் செய்து வைத்தார் அவன் அப்பா. சுபாஷின் மனைவியான சுதாவும் இதுவரை நல்லபடியாகத்தான் பழகி வருகிறாள். இரண்டு

வருடங்களுக்கு முன் தயாளனின் மனைவியான விஜயா திடீரென்று விஷ காய்ச்சல் வந்து இறந்து விட்டாள்.

இப்போது தான் அந்த சோகத்திலிருந்து மெல்ல வெளியே வந்தார் தயாளன். 'இளைய மகனுக்கும் ஒரு நல்ல பெண்ணாகப் பார்த்து திருமணம் முடித்து விட்டால், தன் கடமை முடிந்து விடும்.' என்று நினைத்தார் அவர்.

ஆனால் திருமணப் பேச்சை எடுத்ததுமே தினேஷ், "தனக்கு வேலை பார்க்கும் பெண் தான் வேண்டும்." என்று கூறி விட்டான். அதனால் தயாளனும், "நீயே கல்யாணம் செய்து கொள்ள ஒரு நல்ல பெண்ணாக பார்த்துக் கொள்." என்று தயாளன் கூறி விட்டார். ஆனால், 'இப்படி ஒரு தலித் பெண்ணைத் தான் மணந்து கொள்வேன்.' என்று பிடிவாதமாக இருப்பான் என்று தயாளன் கனவிலும் நினைத்து பார்க்கவில்லை.

தினேஷ் ஒரு அரசு பள்ளியில் ஆசிரியர் ஆவான். அதே பள்ளியில் தலித் பிரிவினருக்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் பணிபுரிய வந்தவள் சரிதா. தினேஷும், சரிதாவும் முதலில் நட்பாகப் பழகி, பிறகு காதலர்களாக மாறி, உடனடியாக திருமணம் செய்து கொள்ளவும் தீர்மானித்தனர். சரிதாவுக்கு, 'தான் பணக்கார வீட்டு பெண்.' என்ற கர்வம் அதிகம். அதனால் அவள் தன் நடை, உடை பாவனைகளால் தான் ஒரு மேல் சாதி பெண் போல் நடந்து கொள்வாள். அவள் தினேஷிடம் மட்டும் தான் அன்புடன், பணிவுடன் பேசுவாள்.

தினேஷிடம், "என் அப்பா எனக்கு எங்கள் சாதியிலேயே ஒரு நல்ல மாப்பிள்ளையை பார்த்து வைத்திருக்கிறார். 'நீ பார்த்து சரி என்றால் உடனே திருமணம் தான்.' என்று அவர் சொல்லி விட்டார். ஆனால் நான், 'என்னுடன் பணிபுரியும் தினேஷைத் தான் மணந்து கொள்வேன்.' என்று உறுதியாக அவரிடம் சொல்லி விட்டேன். அவரும், 'சரி' என்று சொல்லி விட்டார்." என்றாள் சரிதா.

தினேஷும் முதலில் தன் அண்ணனிடம் இது பற்றிப் பேசுவதாகக் கூறினான். அவன் சுபாஷிடம் இது பற்றிப் பேசிய போது சுபாஷ், "நம் அப்பா ஒரு போதும் இந்த திருமணத்துக்கு சம்மதிக்கவே மாட்டார். நீ என்ன செய்யப் போகிறாய்?" என்று கேட்டதும் தினேஷ், "இதில் என் முடிவு எப்போதும் மாறாது. அப்பா சம்மதிக்கவில்லை என்றால், வேறு வழியைத் தான் பார்க்க வேண்டும்." என்றான்.

எனவே சுபாஷ் தன் தந்தையிடம், "தினேஷ் அந்த சரிதாவை மணந்து கொள்வதில் உறுதியாக இருக்கிறான்" என்றதும் தயாளன், "அப்படி என்றால், உடனே நீ ஒரு நல்ல வக்கீலாக பார். நம் பரம்பரை சொத்துக்கள் அனைத்தையும் உடனே உங்கள் இருவருக்கும் பாகப்பிரிவினை செய்து வைத்து விடுகிறேன். இனி அவன் இந்த வீட்டு படியே ஏறக்கூடாது. நான் இறந்தால் கூட அவன் எனக்கு கொல்லி வைக்க கூடாது." என்றார்.

"என்னப்பா... இப்படி சொல்கிறீர்களே?" என்று சுபாஷ் கேட்டதும் தயாளன், "எனக்கு மகன் பாசத்தை விட, சாதி உணர்வே பெரிது." என்றார். உடனே சுபாஷ், 'இந்த சாதி பாகுபாடு எப்போது தான் மறையுமோ?' என்று நினைத்தான். அதே சமயம் இது எதையும் நினைக்காமல் தினேஷ், சரிதாவை பதிவு திருமணம் செய்து கொண்டு, அதே ஊரில் வாழ ஆரம்பித்தான். ●





# யார் இந்த பெண் தான் என்று கேட்டேன்.......

க.சந்திரன்

சரவணன் சென்னை ரயில் நிலையத்தில் மங்களூர் ரயிலுக்காக நாற்காலியில் அமர்ந்து காத்துக் கொண்டிருந்தான். அப்போது ஒரு அழகிய பெண் வந்து அவனது கைகளைப் பிடித்துக் கொண்டு, "மாமோய், நீங்கள் இங்கு தான் இருக்கீகளா? 2 வருசத்துக்கு அப்புறம் இப்பத்தேன் உங்கள நா பாக்குறேன். பரவாயில்லையே, கொஞ்சம் பூசினாற் போல காணப்படுறீகளே. அது சரி, என் அக்கா ஸ்வாதி நலமா இருக்காகளா?" என்று மூச்சு விடாமல் பேசிக் கொண்டே போனாள்.

என்ன தான் அவள் மாடர்ன் உடை அணிந்திருந்தாலும், அவளிடமிருந்த பேச்சு வழக்கு இன்னும் அப்படியே தான் இருந்தது.

அவளது பேச்சை கேட்ட சரவணனுக்கு, 'பேப்பர்களில் வருவது போல, இவள் ஏதாவது மோசடி கும்பலை சேர்ந்தவளாக இருப்பாளோ?' என்ற சந்தேகம் ஏற்பட்டது. ஆனாலும், இத்தனை அழகிய பெண்ணிடம் பேசும் வாய்ப்பை அவன் நழுவவிட விரும்பவில்லை. எனவே அவனுக்கு அவளிடம் பேசுவதில் உற்சாகம் ஏற்பட்டது.

பிறகு அந்த பெண் 45 நிமிடங்கள் அவனுடன் பேசிக் கொண்டிருந்தாள். பின்னர் அவள், "அது சரி மாமோய், நீங்கள் எங்கு போகிறீர்கள்?" என விசாரித்தாள்.

"நான் மங்களூர் செல்கிறேன்." என்றான் தயக்கத்துடன் அவன்.

"நான் கோயம்புத்தூருக்கு செல்கிறேன்." என்றாள் அப்பெண். மேலும் அவள், "மாமோய், நான் ட்ரெயினில் சீட் பிடிக்க உதவுகிறீர்களா?" என உரிமையுடன் வினவினாள்.

சரவணன் அப்போது மணியைப் பார்த்தான். ட்ரெய்ன் வர, இன்னும் 1 மணி நேரம் இருந்தது. "உனது ட்ரெய்ன் வர எவ்வளவு நேரமாகும்?" என கேட்டான் அவன்.

"இன்னும் 10 நிமிசத்துல ரயில் வந்து விடும்." என்றாள் அவள்.

அவள் கூறியதைப் போலவே, 10 நிமிடங்களில் அந்த ட்ரெய்னும் வந்தது. சரவணன் அவளது பேக்கை வாங்கி ஒரு பர்த்தில் வைத்தான். அவளது பொருட்களையும் வாங்கி வைத்தான். அவள் அவனது கைகளைப் பிடித்துக் கொண்டு, "சார், உங்கள் உதவிக்கு நன்றி. நான் கோயம்புத்தூரில் வசிக்கிறேன். மாடலிங் செய்வது எனது தொழில். நான் டெல்லியிலிருந்து

வருகிறேன். சில குண்டர்கள் டாக்ஸியில் மட்டுமல்லாமல், பிளாட்பார்மிலும் என்னை பின் தொடர்ந்து வந்தார்கள். அது தான் நான் உங்களை தெரிந்தவர் போல் காட்டிக் கொண்டேன். என்னை மன்னித்து விடுங்கள். ஆனால் நான் இப்படி நடந்து கொண்டதால், என்னை பின்தொடர்ந்து வந்த அவர்கள் ஓடி விட்டார்கள். என்னிடம் இதுவரை கண்ணியமாக நடந்ததற்காக உங்களுக்கு

**“ஒரு நாள் ரயில் நிலையத்தில் தான் மங்களூர் செல்வதற்காக காத்துக் கொண்டிருந்தான் சரவணன். அப்போது அவனருகே வந்த ஒரு பெண், அவனிடம் சகஜமாக பேசத் தொடங்கினாள். அவளிடம் சரவணன் பேசினானா? இல்லையா? யார் அந்த பெண்?”**

நன்றி. என் பெயர் மானஸா. உங்கள் பெயர் என்ன?” என்றாள்.

சரவணன் எழுந்து நின்றவாறே, “என் பெயர் சரவணன். அது சரி, என் மேல் எப்படி நம்பிக்கை வந்தது?” என கேட்டான்.

முகத்தில் புன்னகை தழவ மானஸா, “சார், எப்போதும் பெண்களுக்கு ஜென்டில்மேன்களை அடையாளம் காணத் தெரியும். அந்த அடிப்படையில் தான் நான் உங்கள் மீது நம்பிக்கை வைத்து, இவ்வாறு நடந்து கொண்டு என்னை நானே காப்பாற்றிக் கொண்டேன்.” என்றாள்.

மானஸாவின் இந்த வார்த்தைகளைக் கேட்ட சரவணன் ஒரு நீண்ட பெருமூச்சுடன் ட்ரெய்னிலிருந்து கீழே இறங்கியவாறே, “ஹேப்பி ஜர்னி.” என்றான். ●




***நான் 24 வயது வாலிபன். தினமும் பேப்பரில் 1,000 ரூபாய் செக்யூரிட்டி கட்டினால் பணக்கார மேடம்களுக்கு படுக்கையறை பார்ட்டனராக இருப்பதில் நிறைய பணம் சம்பாதிக்கலாம் என்று படித்தேன். இது உண்மையா?***

இந்த மாதிரியான விளம்பரங்களிலிருந்து தப்பிக்கவும். இம்மாதிரி ஆட்களின் வலையில் விழுந்து பலர், தங்கள் வாழ்க்கையை நாசம் செய்து கொண்டனர். இவர்கள் தங்களிடம் சிக்கியவர்களின் நிர்வாண படத்தை எடுத்து அவர்களை பிளாக்மெயில் செய்கின்றனர். பணம், மொபைல் போன்றவைகளைத் திருடிக் கொண்டு விடுவதுடன் செக்யூரிட்டி பணத்தை திருப்பித் தருவதில்லை.

●

***என் வயது 22. என் மாமியின் வயது 26. நான் அவர்களுடன் உடலுறவு கொள்ள விரும்புகிறேன். நாங்கள் இருவரும் அவ்வப்போது முத்தமிட்டுக் கொண்டிருக்கிறோம். எங்கள் தொடர்பு ஏற்பட வாய்ப்பு உண்டா?***

உங்கள் வயதில் இளம் வயதுப் பெண்களைப் பார்த்து சபலம் கொள்வது இயற்கை. ஆனால் உங்கள் காதல் தவறானது. முதலில் உங்கள் மாமியைப் பற்றிய தவறான எண்ணங்களை விலக்கவும். உங்கள் அம்மா மற்றும் மாமாவுக்கு இது தெரிந்தால் உங்கள் கதி அதோகதி தான்.

●

***20 வயது இந்து பையன் நான், ஒரு முஸ்லிம் பெண்ணை விரும்புகிறேன். நாங்கள் இருவரும் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறோம். ஆனால் எங்கள் வீட்டில் இதுக்கு சம்மதிக்கவில்லை. என்ன செய்வது?***

உங்களுக்கு இன்னும் திருமணம் செய்து கொள்ளும் வயது வரவில்லை. வேற்று மதத்து பெண்ணை திருமணம் செய்வதில் பல பிரச்சனைகள் உள்ளன. அந்தப் பெண்ணை மறந்து விட்டு, உங்கள் கேரியரில் கவனம் செலுத்துங்கள்.

●

***நான் ஒரு இந்துப் பெண். பக்கத்து வீட்டு பையனைக் காதலித்து இருவரும் ரகசியமாகத் திருமணமும் செய்து கொண்டோம். ஆனால் இருவர் வீட்டிலும் இந்த திருமணத்தை ஒப்புக் கொள்ளவில்லை. என்ன செய்வது?***

ரகசியத் திருமணத்தை யாரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். உங்கள் இருவருக்கும் திருமணம் செய்து குடும்பம் நடத்தத் தேவையான வயதும், வருமானமும் இருந்தால் உங்கள் பெற்றோர்கள் சம்மதத்துடன் திருமணம் செய்து கொள்ளவும். அவர்கள் இதற்கு சம்மதிக்கவில்லை என்றால் கோர்ட் மேரேஜ் செய்து கொள்ளலாம்.

●

***என் வயது 23. திருமணமாகி 5 வருடம் ஆகி விட்டது. என் மனைவி உடலுறவில் விருப்பமில்லாமல் இருக்கிறாள். நான் அவளை நெருங்கி தொடும் போது, கோபிக்கிறாள். என்ன செய்வது?***

மனைவி நல்ல மூடில் இருக்கும் போது மனம் விட்டுப் பேசவும். திருமணத்தின் வெற்றிக்கு உடலுறவும் அவசியம் என்பதை புரிய வையுங்கள். செக்ஸ் படங்களைக் காண்பிக்கவும். நீங்கள் பிரியமாக எடுத்துச் சொன்னால், உங்களுக்கு வெற்றி கிடைக்கும். உங்கள் மனைவியின் மூத்த சகோதரி அல்லது அண்ணியை அவளிடம் பேசச் சொல்லுங்கள். மனைவியை நெருங்கும் போது மெல்ல மெல்ல நெருக்கத்தை அதிகரித்து, பிறகு உடலுறவுக்கு முயலவும்.

●

***என் வயது 22. நான் என் மாமா பெண்ணை (19 வயது) விரும்புகிறேன். நாங்கள் இருவரும் பலமுறை உடலுறவு கொண்டிருக்கிறோம். ஆனால் அவள் பெற்றோர் அவளுக்கு வேறு இடத்தில் திருமணம் செய்து வைக்க விரும்புகிறார்கள். இப்போது நாங்கள் என்ன செய்வது?***

முதலில் காம வயப்பட்டு நீங்கள் இருவரும் நடந்து கொண்டது மிகவும் தவறு. உங்கள் மாமா, ‘தன் மகளை உங்களுக்குத் திருமணம் செய்து வைப்பார்.’ என்று நினைக்காதீர்கள். உங்கள் மாமா மகளை விட்டு விலகி அவளுக்கு வேறு இடத்தில் திருமணம் நடப்பதை ஆதரிப்பதே உங்களுக்கு நல்லது. ●




# 'துண்டை காணோம், துணியை காணோம்' என ஓடினார்கள்!

சி.முத்துச்செல்வன்

நான் என் அறையில் நுழைந்த போது. நான் அறிந்திராத இருவர் எனக்காக அங்கு காத்திருந்தனர். ஒருவர் கதர் ஆடை அணிந்திருந்தார். மற்றொருவர் பேன்ட்-ஷர்ட் அணிந்திருந்தார்.

'யார் நீங்கள்?' என்பது போல் நான் அவர்களைப் பார்த்தேன்.

எனது பிஏ, "சார், இவர்கள் உங்களைப் பார்க்க வேண்டுமாம்." என்றான்.

"எனக்கு இப்போது யாரையும் பார்க்க நேரமில்லை." என்றேன் கோபத்துடன் நான். மேலும் நான், "யாருக்கும் இந்த நேரத்தில் நான் அபாயின்ட்மென்ட் எதுவும் கொடுக்கவே இல்லையே?" என்றேன்.

வந்தவர்களில் கதர் ஆடை அணிந்திருந்தவர், "இல்லை, ஐயா. நீங்கள் எங்களுக்கு நேரம் ஒதுக்கியே ஆக வேண்டும்." என்றார்.

"அது சரி, யார் நீங்கள்?"

"நான் இந்த கட்சியை சேர்ந்தவர்." என்றார் கதர் ஆடை அணிந்திருந்தவர்.

"நானும் அதே கட்சியைச் சேர்ந்தவன் தான். சமூக சேவை புரிவது தான் எனது தொழிலும். எனக்கு ஒரு சர்ட்டிஃபிகேட் வேண்டும்." என்றார் மற்றொருவர். மேலும் அவர், "என் மகள் ஒரு வேலைக்கு அப்ளை செய்திருக்கிறாள். அதற்கு தான் நீங்கள் ஒரு எக்ஸ்பீரியன்ஸ் சர்டிஃபிகேட் தர வேண்டும்." என்றார்.

"இது முடியாத காரியம். அவர்கள் இங்கு வேலை செய்யாமல் எப்படி சர்டிஃபிகேட் தர முடியும். இது போன்ற தவறான செயல்களை நான் செய்ய மாட்டேன்." என்றேன்.

"சார், இப்போது எல்லாம் சரியான காரியம், தவறான காரியம் என்றெல்லாம் பார்க்க முடியாது. சமுதாயத்தில் ஒருவருக்கொருவர் உதவுவதில் தவறென்ன? உங்களுக்கு வேண்டியதைக் கூறுங்கள், நாங்கள் அதை தந்து விடுகிறோம்." என்றார். மேலும் அவர், "இதோ பாருங்கள், டைப் செய்து கொண்டு வந்து விட்டோம். உங்கள் கையெழுத்தும், சீலும் தான் தேவை. உங்கள் செக்ரட்டரியை கூப்பிடுங்கள்." என்றார்.

"உங்களை யார் இங்கு வரச் சொன்னது? தேவை இல்லாமல் இங்கு வந்து என்னை கம்பெல் செய்கிறீர்கள்? முதலில் இங்கிருந்து செல்லுங்கள். எனக்கு இங்கு ஒரு அவசர மீட்டிங் உள்ளது."

"சிந்தித்து பதில் கூறுங்கள், ஒரு பெண்ணின் வாழ்க்கை இதில் அடங்கியுள்ளது. அரசியல்வாதிகளின் உதவியும் உங்களுக்கு தேவைப்படலாம். இப்போது நீங்கள் எங்களுக்கு உதவவில்லை என்றால், எங்களாலும் உங்களுக்கு என்ன செய்ய வேண்டுமோ, அதை செய்ய முடியும். நீங்கள் வீட்டை விட்டு கிளம்பும் நேரம், உங்கள் குழந்தைகள் பள்ளிக்குச் செல்லும் நேரம் எல்லாமே எங்களுக்குத் தெரியும்?" என மிரட்டும் பாணியில் ஆரம்பித்தனர்.

எனக்கு தலை சுற்ற ஆரம்பித்தது. 'போலீஸை கூப்பிடலாமா?' என நினைத்தேன். ஆனால் அதற்கும் சிறிது நேரமாகுமே. ஆகையால் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, "நீங்கள் என்னை சட்ட விரோதமான காரியம் செய்யச்



**“ஒரு நாள் என் ஆபீசுக்கே வந்து என்னிடம் போலீ சான்றிதழ் தருமாறு வற்புறுத்தினர் இருவர். ஆனால் நான் இது பற்றி என் நண்பனிடம் சொன்னதும், அவன் எடுத்த அதிரடி முடிவால், அவர்கள் இருவரும் ‘துண்டைக் காணோம், துணியைக் காணோம்’ என்று ஓடி விட்டனர். ஏன் தெரியுமா?**

சொல்கிறீர்கள். உங்களுக்கு எதிராக போலீஸில் ரிப்போர்ட் செய்து விடுவேன்.” என்றேன்.

“தாராளமாகச் செய்து கொள். யாராலும் எங்களை ஒன்றும் செய்ய முடியாது.” என்றார்கள் அவர்கள். இவர்கள் உச்ச குரலில் பேசியதைக் கேட்டு, செக்ரட்டரி உள்ளே வந்தார். “சார், நான் இவர்களைப் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் மீட்டிங்கிற்கு செல்ல தயாராகுங்கள்.” என்றார்.

அவர்கள் இருவரும் எழுந்து நின்று சத்தமாக, “இப்போது நாங்கள் கேட்பதைச் செய்யாவிடில், பிறகு நடப்பதே வேறு.” என கத்தினார்கள்.

“நான் ஒரு போதும் சட்ட விரோதமான காரியங்களை செய்ய மாட்டேன்.” என அழுத்தமாகக் கூறினேன் நான்.

“நாங்கள் இன்று மாலை 6 மணிக்கு மீண்டும் வருவோம். இந்த சர்டி்ஃபிகேட்டில் உங்கள் கையெழுத்து இருக்க வேண்டும். இல்லையெனில், அதன் பின் நடப்பதற்கு நீ தான் நடக்கும் கெட்டது அனைத்துக்கும் பொறுப்பு.” என்று கூறிவிட்டு வெளியேறி விட்டனர்.

“நாளைக்கு நீங்கள் வராதீர்கள், சார். பேசாமல் வீட்டிலேயே இருங்கள்.” என்றார் பிஏ. நான் அன்று மாலை வீட்டுக்குச் சென்று என் மனைவியிடம், “கவனமாக இரு. குழந்தைகளை வெளியே அனுப்ப வேண்டாம்.” என்றும் எச்சரித்தேன்.

“என்ன விஷயம் என்று கூறுங்கள். உங்கள் குரலே சரியில்லையே?” என என்னுடைய மனைவி விசாரித்தாள்.

நானோ, “நான் சீக்கிரமே வீட்டுக்கு வந்து விடுகிறேன். கேட்டை உள்ளே பூட்டிக் கொள். ஒன்றும் பெரிதாக இல்லை.” என்று கூறினேன். பின்னர் அவளுக்குத் தெரியாமல், என் நண்பனிடம் போன் செய்து மெல்லிய குரலில் நடந்தவற்றைக் கூறினேன். மேலும் அவனை அனைத்து ஏற்பாடுகளுடனும் வருமாறும் கூறினேன்.

அன்று மாலை ஆறு மணிக்கு வீட்டிற்கு வந்த நான், அழைப்பு மணியை அழுத்தினேன். வீடே ஒரே அமைதியாக இருந்தது. “யார் அது?” என்று என் மனைவி தான் குரல் கொடுத்தாள்.

“நான் தான். கதவைத் திற.” என்றேன் நான்.

“ஏன் இவ்வளவு அச்சப்படுகிறாய்?” என கேட்டேன்.

“இரண்டு போன் கால்கள் வந்தன. ‘சார், வீட்டுக்கு வந்து விட்டாரா?’ என கேட்டார்கள். அது தான் அச்சமாக இருந்தது.” என்றாள் அவள். பிறகு, “ஆனால் உங்கள் முகம் அச்சப்படுவது போல் தோன்றுகிறதே?” என்றாள்.

நான் பேசாமல் பேக்கை மேஜை மேல் வைத்தேன். சிறிது நேரத்தில் என் நண்பன் அங்கு வந்தான். “உனக்கு தேவையான அனைத்து பந்தோபஸ்தும் செய்து விட்டேன். வீட்டிலேயே இரண்டு போலீஸ்காரர்களை ட்யூட்டியில் போட்டுள்ளேன்.” என்றான். மேலும் அவன், “நீ இனி இது குறித்து எந்த கவலையும் கொள்ள வேண்டாம்.” என்றான்.

“என்ன தான் செய்தாய் நீ?” என்று அவன் காதுகளில் கிசுகிசுத்தேன். அவனோ, “எனக்கு அந்த கதர் டிரெஸ் அணிந்த சங்கரைத் தெரியும். அவர் சுதாகர் என்ற ரௌடியைக் கண்டால் தான் பயப்படுவார். இன்று மாலை உன் ஆபீஸிற்கு அவர்கள் வந்த போது, சுதாகரை அங்கு நிற்கச் சொல்லியிருந்தேன். சுதாகரை எனக்கும் நன்கு தெரியும். அவர் எனக்கு பல விதங்களில் உதவி புரிந்துள்ளார்.

சுதாகரை உன் ஆபீஸ் வாயிலில் கண்டவுடன், சங்கர் அவரை வணங்கி விட்டு சிறிது தயங்கியுள்ளார். உடனே சுதாகர் அவரைப் பார்த்து, “நீ எதற்காக இங்கு வந்திருக்கிறாய் என்று தெரியும். தேவையில்லாமல் சாருக்கு ஏதாவது துன்பம் தந்தாயானால், பின்னால் நீ தான் வருத்தமுற நேரும்.” என எச்சரித்துள்ளார்.

சங்கரும், ‘கோபித்துக் கொள்ளாதே, சுதாகர். நான் அந்த தாமோதர ராவ் அழைத்தானே என்று தான் இங்கு வந்தேன். இவர் உனக்கு வேண்டியவர் என்று தெரிந்தால், நான் நிச்சயம் இதில் இனி தலையிட மாட்டேன்.’ எனக் கூறிவிட்டுச் சென்று விட்டார்.” என்றான்.

இப்போது தான் எனக்குள்ளிருந்த அச்சம் மறைந்தது. நான் என் நண்பனுக்கு நன்றி கூறினேன். இனி என் மனைவியும், குழந்தைகளும் அச்சமின்றி இருப்பர் அல்லவா? ●

# நாற்காலிக்கு சண்டை போடும் நாடு நம்ம...

க.நாராயணன்

சில நாட்களாகவே இந்திய மக்களின் ஒட்டு மொத்த கண்களும், நம் தமிழ்நாட்டில் நடக்கும் அரசியல் அந்தர் பல்டிகளைத் தான் பார்த்தன. அதிலும் குறிப்பாக, "தமிழ்நாட்டின் அடுத்த சிஎம் யார்?" என்று டீக்கடைக்கு டீக்கடை மட்டுமல்லாமல், பஸ், டிரெயின் என எங்கு பார்த்தாலும், மக்கள் கூடும் இடங்களில் இதே பேச்சாகத்தான் இருந்தது. அதிலும் குறிப்பாக, "இப்போதைக்கு தமிழ்நாட்டின் சிஎம் யார்?" என்றால், அவர்கள் பொட்டில் அடித்தாற் போல பதில் சொல்ல மாட்டார்கள், சற்றே யோசித்து விட்டு தான் பதில் சொல்வார்கள். காரணம் அந்த அளவுக்கு அந்தர் பல்டி அடிக்கிறது தமிழ்நாட்டு அரசியல் சூழ்நிலை.

இந்த நிலையில் இவர்கள் மட்டுமல்ல, இந்தியாவின் ஒட்டுமொத்த அரசியல்வாதிகளும், எந்த நாற்காலிக்கு சண்டை போடுகிறார்களோ, அந்த நாற்காலியால் பேச முடிந்தால், என்னென்ன மனக்குமுறல்களை வெளிப்படுத்தும் என்று காண்போமா?

"நான் தான் நாற்காலி பேசுகிறேன். எல்லா காலங்களிலும் எனக்கு மதிப்பும், மரியாதையும் உண்டு. அழகான யுவதிகளை விட எனக்கு தான் மதிப்பு அதிகம். சரித்திரத்தில் கூட எனக்காக பல போர்கள் நடந்திருப்பது உங்களுக்கு தெரிந்திருக்குமே. என் மேல் அந்த அளவுக்கு எல்லோருக்கும் மிகவும் பிரியம். எனக்காக சிலர் தங்கள் உயிரைக் கூட பணயம் வைத்துப் போராடுவார்கள்.

தங்கள் நெருங்கிய சொந்தத்தைக் கூட பலி கொடுப்பர். தந்தையையும் சிறையில் அடைப்பார்கள். என்னை அடைய நட்புக்கு கூட பை பை காட்டி விடுவார்கள். ராஜா, மந்திரி காலத்திலிருந்து இப்போது வரை சிலர் என்னை அடைய பல சதித் திட்டங்களை தீட்டி இருக்கிறார்கள், இன்னும் தீட்டுவார்கள். ராஜா காலத்தில் தந்திரம் மற்றும் புத்தி சாதுர்யத்தால் என்னை சிலர் அடைந்தனர்.

பிறகு ராஜா காலம் போய் நாடு சுதந்திரம் அடைந்து, ஜனநாயக ஆட்சி மலர்ந்ததும், என்னை அடைய ஓட்டுகளே தேவைப்பட்டன. ஆனால் என்னை அலட்சியம் செய்தவர்களே இதுவரை யாரும் இல்லை. என்னை அடைய ஜனநாயகத்தை குழி தோண்டி புதைப்பதும், சட்டத்தை அலட்சியம் செய்வதும் சிலருக்கு சகஜம். என்னை அடைய சில எதிரிகள் கைகோர்த்துக் கொள்கிறார்கள். சிங்கமும், மானும் கூட எனக்காக நட்பு பாராட்டுவது போல நடிக்கின்றன.

நான் தான் ஆட்சி, அதிகாரம், செல்வம், பெருமை எல்லாம். எவ்வளவு பெரிய ஆட்களும் என் முன்னால் ஊமையாகி விடுவார்கள். எனக்காக அவர்கள் தங்கள் மனசாட்சியையும் துறந்து விடுவார்கள். நான் தான் நிஜம், என்னை அடைந்தவுடன் குசேலன் குபேரனாகிறான், மூடன் புத்திசாலியானது போல உணர்கிறான். என் மீது அமர்ந்தவனுக்கு எல்லா செல்வங்களும் வந்து சேரும்."

என்ன நாற்காலி பேசியது போதுமா? இன்னும் அதை பேசச் சொல்லலாமா? அவ்வாறு அது பேச ஆரம்பித்தால், சில அரசியல்வாதிகள் எல்லாம் அவ்வளவு தான். ●




**"இந்த நாற்காலிக்குத் தான் எத்தனை எத்தனை சண்டைகள்? ஒரு வேலை நாற்காலியால் பேச முடிந்தால், கண்டிப்பாக அது இங்கு கூறப்பட்டுள்ளது போலத் தான் பேசும்."**



# இந்த கொடுமைகளை எங்கு போய் சொல்வது?

'ரவுண்ட்ஸ்' ரங்கன்

ஒரு பக்கம் பாலியல் கல்வி தேவையா? இல்லையா என்ற விவாதங்கள் நடந்த வண்ணம் உள்ளன. ஆனால் மறுபுறம் 3 வயது, 6 வயது சிறுமிகள் கூட பாலியல் வன்கொடுமைக்கு பரிதாபமாக பலியாகி வருவது தான், நம் மனங்களை கனக்க வைக்கிறது.

இதற்கு இன்று சட்டங்கள் தீவிரமாக்கப்பட வேண்டும் என்பது பலரது கோரிக்கையாக உள்ளது. ஒரு சில பெண்மணிகள் இவ்வாறான விஷயங்களை கேள்விப்பட்டதும், "சவுதி அரேபியா, துபாய் போன்ற நாடுகளில் உள்ளது போல, வன்கொடுமை போன்றவற்றில் ஈடுபடும் வக்கிரம் பிடித்தவர்களை உடனடியாக தூக்கிலிட வேண்டும்." என்று கூறுவதை கேட்கிறோம்.

என்ன தான் தன்னார்வு தொண்டு நிறுவனங்கள் மற்றும் சமூக சேவை அமைப்புகள் இது குறித்த விழிப்புணர்வு முகாம்களை நடத்தினாலும், இன்னும் ஆங்காங்கே இத்தகைய அவலங்கள் நடப்பதை என்னவென்று சொல்வது?

சில தினங்களுக்கு முன்பு சென்னை போரூரில் 6 வயதே நிரம்பிய ஹாசினி என்ற சிறுமி ஒரு இளைஞரால் வன்கொடுமைக்கு ஆளாகி கொல்லப்பட்டு, எரிப்பட்ட சம்பவம் மக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சி அலையை ஏற்படுத்தியது. இறந்து போன அந்த பிஞ்சு குழந்தைக்கு நியாயம் கேட்டு, அந்த பகுதியை சேர்ந்த மக்கள் போராட்டத்தில் கூட ஈடுபட்டனர். ஆனால் அந்த பாவ செயலை செய்த இளைஞனுக்கு உரிய தண்டனை கிடைத்தா? அவன் இனி சிறையை விட்டு வெளியே வருவானா? என்பது போன்ற கேள்விகள் நம் எல்லோர் மனதிலும் எழவே செய்யும்.

அபார்ட்மெண்டில் வசித்து வந்த சிறுமியான ஹாசினிக்கு இந்த கொடுமை அரங்கேறியுள்ளது. அவளுடைய பெற்றோர், அவளுடைய தம்பியை அழைத்து கொண்டு பக்கத்தில் உள்ள கடைக்கு சென்று வருவதற்குள் தான், வெளியே விளையாடி விட்டு வீட்டுக்கு தனியாக வந்த ஹாசினியிடம் இந்த கொடூர மிருகம் இவ்வாறு நடந்து கொண்டது.

கடைக்கு சென்றுவிட்டு திரும்பிய தம்பதி குழந்தையை காணாமல் அங்கும் இங்கும் தேடி உள்ளனர். 'எந்த குழந்தை கடத்தல் கும்பலாவது குழந்தையை கடத்திக் கொண்டு போயிருக்கும்.' என தான் அவர்கள் முதலில் நினைத்தனர். ஆனால் போக போக விஷயம் வெளியே வந்துள்ளது. இந்த கொடூர மிருகம் குழந்தையை

## செங்குன்றத்தில் பள்ளி மாணவிக்கு பாலியல் தொல்லை

**சென்னையை** அடுத்த மாதவரம் பொன்னியம்மன்மேடு மா.போ வேதா தெருவை சேர்ந்த ஆசை என்ற ஆசைதம்பி (வயது 37), அதே பகுதியை சேர்ந்த ஒரு பள்ளி மாணவிக்கு பாலியல் தொந்தரவு தந்ததாக கூறப்படுகிறது. இது குறித்து அந்த மாணவியின் தாயார் மாதவரம் போலீசில் புகார் தர இன்ஸ்பெக்டர் வழக்கு பதிவு செய்து உடனடியாக அந்த ஆசைதம்பியை கைது செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இப்படி பல சம்பவங்கள் தினமும் நடந்து வருவது தான் மிக கொடுமையாக உள்ளது.



கொலை செய்து விட்டு டிராவல் பேகில், அந்த பிணத்தை எடுத்துக் கொண்டு சென்றது அங்கிருந்த சிசிடிவி கேமராவில் பதிவாகி இருந்ததால் தான் போலீசாருக்கு இது குறித்து துப்பு கிடைத்தது. பிறகு தான் விஷயம் வெளிச்சத்துக்கு வந்தது. பொறியியல் பட்டதாரியான இந்த காமுகன் தான் இத்தகைய கோர சம்பவத்தை செய்திருக்கிறான்.

இதே போல் சில நாட்களுக்கு முன்பு பட்டினபாக்கத்தை சேர்ந்த 3 வயது சிறுமி காணாமல் போக, இது போன்ற வன்கொடுமை நிகழ்ந்திருப்பதாக செய்தி வெளியானது. ஆனால் பிறகு இது உண்மை அல்ல என்று தெரிய வந்தது. ஒரு பெண் அந்த சிறுமி அணிந்திருந்த நகைகளுக்கு ஆசைப்பட்டு இப்படி கொலை செய்ததாக செய்தி வெளியானது. இப்போது அந்த பெண் சிறையில் இருக்கிறார்.

இங்கு தான் இப்படி என்றால் பெங்களூரில் ஒரு டேகேர் சென்டரில் ஒரு குழந்தை இதே போன்ற வன்கொடுமைக்கு ஆளாகியது தான் மேலும் பரிதாபம். இந்த கொடூர சம்பவத்தில் ஈடுபட்ட ஆணுக்கு உரிய தண்டனை வழக்கப்பட்டு விட்டது. இருப்பினும் இந்த தண்டனை போதுமானதல்ல. இவ்வாறான கொடுமைகளில் ஈடுபடும் நபர்கள் மீது உடனடி நடவடிக்கை அதுவும் கடும் தண்டனை வழங்கப்பட வேண்டும். அப்போது தான் இத்தகைய சம்பவங்கள் இனியும் அரங்கேறாமல் இருக்கும். மேலும் பெண் குழந்தைகளிடம், நல்ல ஸ்பரிசம், கெட்ட ஸ்பரிசம் போன்றவற்றுக்கான வேறுபாடுகளை சொல்லித் தருவதோடு, இக்கட்டான சூழ்நிலையில் மாட்டிக் கொண்டால் என்ன செய்வது அதாவது டெல்லியில் நடந்த நிர்பயா சம்பவத்துக்குப் பிறகு மிளகாய் தூள் ஸ்ப்ரே வந்தது போல நம் வீட்டு பெண் குழந்தைகளுக்கும் இத்தகைய ஸ்ப்ரே பற்றியும் சொல்லித் தருவதோடு அவற்றை வாங்கியும் தரலாம். மேலும் பெண் குழந்தை என்றால் பரதம், வெஸ்டர்ன் டான்ஸ் போன்றவை மட்டுமே கற்க வேண்டும் என்பது நியதி இல்லையே? அக்குழந்தைக்கு கராத்தே, ஜுடோ போன்ற தற்காப்பு கலைகளையும் சொல்லித் தந்து வளர்த்தால், அவை அக்குந்தைகளை பாதுகாக்க உதவுமே. மேலும் செல்போனை கொடுத்து விட்டு அதில் கேம்ஸ் விளையாட மட்டுமே சொல்லித் தருகிறோம். குழந்தைகளுக்கு ஒரு பிரச்சனை என்றால் அவர்கள் எந்த ஹெல்ப்லைன் நம்பரை அணுகுவது என்பது போன்வற்றையும் சொல்லித் தரலாம்.

**இந்த பாதக செயலை புரிந்த குற்றவாளி**



இப்போது பெண்களுக்கு ஒரு பிரச்சனை என்றால், அவர்கள் 9833312222 நிர்பயா என்ற நம்பருக்கு மிஸ்டு காலோ எம்டி மெசேஜோ தந்தால் போலீசார் அவர்கள் இருப்பிடத்தை அறிந்து கொண்டு வந்து உதவுவர். ஆகவே இது போன்ற தகவல்களை நாம் நம் வீட்டு பெண் குழந்தைகளுக்கு அவசியம் சொல்லித் தர வேண்டும்.

அதே போல் பெற்றோர் சிறு பெண் குழந்தைகள் தான் என்று கிளமரான டிரெஸ்களை சிறுவயது முதலே அணிய விடுவதை தவிர்க்கலாம். காரணம் இப்போது சில ஆண்களின் கண்ணோட்டம் என்பது இன்னும் வக்கிரமாகி விட்டது என பெண் குழந்தைகளை பெற்ற பெண்மணிகள் உணர்ந்து கொள்ள வேண்டும். மேலும் முடிந்த மட்டும் பெண் குழந்தைகளை தனியே விடுவதை தவிர்க்க வேண்டும். அவ்வாறு தனியே விட்டாலும் அவர்கள் பாதுகாப்பு சரியாக உள்ளதா? என்று அறிந்து கொள்ள வேண்டும். சில ஆண்டுகளுக்கு முன்பு பெண் சுதந்திரம் என்பதன் அர்த்தமே வேறாக இருந்தது. ஆனால் இன்று பெண் சிறுமிகளுக்குக் கூட சுதந்திரம் என்பதே இல்லை. இதுவே நிதர்சனமான உண்மை. அந்த காலத்தில் கூட்டுக் குடும்பமுறை இருந்ததால் தாத்தா, பாட்டி, மாமா, அத்தை என அந்த குழந்தைக்கு அனுசரணையாக பாதுகாப்பாக இருந்தனர். ஆனால் இப்போது நிலைமை அப்படி இல்லையே? ப்ளே ஸ்கூல், டேகேர், க்ரெச், ப்ரிகேஜி குழந்தைகளை சேர்க்க வேண்டிய நிலை உள்ளதே.

வெளி ஆட்கள் மட்டுமல்லாமல் குடும்பத்தில் உள்ள நெருங்கிய ஆண் உறவு மூலமும் குழந்தைகள் இப்படி வன்கொடுமைக்கு ஆளாவர். ஆகவே மேற்சொன்னவாறு பெண் குழந்தைகளுக்கு இது குறித்த போதிய விவரங்களை தாயானவள் கற்றுத்தர வேண்டியது மிக மிக அவசியம்.

சென்னை சாலிகிராமத்தில் வசிக்கும் ஸ்ரீவித்யா என்ற பெண்மணி பலவிதமான சமூக சேவைகள் செய்வதோடு, இத்தகைய வன்கொடுமைக்கு பெண் குழந்தைகள் ஆளாகாமல் இருக்க அவர்களுக்கு விழிப்புணர்வு தரும் வகையில் பள்ளிகளுக்கே சென்று சிறப்பு முகாம்களையும் தனது குழுவுடன் செய்து வருகிறார். இதே போல் அங்குள்ள பெண் குழந்தைகளிடம் தனியாக பேசி இது போன்ற பிரச்சனைகளுக்கு அவர்கள் ஆளாகி இருந்தால் அந்த பெண் குழந்தைகளுக்கு கவுன்சிலிங்கும் தருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. ●

# டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்திரேட்டின் அதிரடி நடவடிக்கை!

பிரதிநிதி



பொதுவாக பள்ளிகளில் கல்வி அதிகாரிகள் இன்ஸ்பெக்ஷன் வரும் போது மட்டுமே சில வாத்தியார்கள் அந்த வகுப்பு மாணவர்களை, இன்ஸ்பெக்ஷனுக்கு வரும் அந்த கல்வி அதிகாரி என்ன கேள்வி கேட்டாலும் பதில் சொல்லும் விதத்தில் தயார்ப்படுத்துவர். இது எல்லா இடங்களிலும் வழக்கமாக நடக்கும் ஒன்று. ஆனால் இங்கே நாம் காண இருப்பது வித்தியாசமான ஒரு நிகழ்வை ஆகும்.

பாட்னாவின் பாங்கிபூர் ஸ்கூல் பெண்கள் காலை முதலே மிகவும் உற்சாகமாக காணப்பட்டனர். அடிக்கடி அவர்கள் பார்வை கதவை நோக்கி சென்று திரும்பின. மதியம் ஒரு மணி அளவில் ஒரு மனிதர் கிளாஸ் ரூமில் நுழைந்தார். அவரைக் கண்ட போது எந்த விதத்திலும் பள்ளி வாத்தியாராக தோற்றம் அளிக்கவில்லை.

உண்மையில், அவர் தான் பாட்னாவின் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்திரேட்டான சஞ்சய் குமார் அகர்வால். அவர் ஒரு மாணவி குஷ்பூ குமாரியின் நோட்டு புத்தகத்தை புரட்டி பார்த்து விட்டு, "அங்கு என்ன சொல்லித் தரப்படுகிறது," எனக் கேட்ட போது அந்த மாணவி, "அப்பள்ளியில் கல்வி என்பதே சொல்லித் தரப்படுவதில்லை.' என பதிலளித்தாள்.

டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்திரேட் சஞ்சய் குமார் அகர்வால் இதைப் பற்றி ஸ்கூல் நிர்வாகத்திடம் கேட்ட போது, அங்கு அறிவியல், ரசாயனம், பூகோளம், இந்தி, உருது, டைப்பிங் மற்றும் சங்கீதம் கற்றுத் தர டீச்சர் இல்லை எனத் தெரிய வந்தது.

"தனியார் கோச்சிங் சென்டருக்கு ஏன் செல்கிறார்கள்?" என அங்கு இருந்த மாணவிகளிடம் கேட்ட போது, கள்ளமில்லா சிறுமிகள் கூறிய பதில் எஜுகேஷன் சிஸ்டத்தின் குட்டை வெளிப்படுத்துவதாக இருந்தது. அவர்கள் கூறிய பதில், "ஸ்கூலில் பாடம் நடத்தப்படுவதே இல்லையே?" நாங்கள் கோச்சிங் சென்டர் செல்லாவிட்டால் படிப்பு எப்படி கம்ப்ளீட் ஆகும்?"

பீகாரின் எஜுகேஷன் சிஸ்டத்தைப் பற்றி நேரடியாக தெரிந்து கொள்வதற்காக, பாட்னாவின் கலெக்டர் சஞ்சய் குமார் அகர்வால் சமீபத்தில் ஒரு நாள் அவர் அரசு பள்ளியில் மாணவிகளுக்கு பாடம் நடத்த வந்து சேர்ந்தார். அவர் பாட்னாவின் எல்லா அரசு பள்ளிகளிலும் பாடம் சொல்லிக் கொடுக்க அதிகாரிகளின் ஒரு குழு அமைத்தார்.

எது எப்படியோ, அங்குள்ள அரசு பள்ளிகளை சீர் செய்வதற்காக பாட்னாவின் டிஎம் சஞ்சய் குமார் அகர்வால் சிறப்பான ஒரு நடவடிக்கை எடுத்துள்ளார் என்று தான் கூற வேண்டும். அவர் 200 அதிகாரிகளின் கொண்ட டீம் ஒன்றை உருவாக்கியுள்ளார். அவர்கள் ஒவ்வொரு வாரமும் பள்ளிகளுக்கு சென்று, ஒரு மணி நேரம் மாணவர்களுடன் நேரத்தை செலவழிக்க வேண்டும். கூடவே அந்த ஸ்கூலில் உள்ள குறைபாடுகளை அகற்ற முயற்சி செய்ய வேண்டும்.

பிடிஓ, டிஎம், எஸ்டிஎம், ஏடிம், டிஎஸ்பி, சிஓ, காவல்துறை அதிகாரி, சிடிபிஓ மற்றும் கல்வித் துறையை சேர்ந்த எல்லா பெரிய அதிகாரிகளும், அங்குள்ள அரசு பள்ளிகளின் எஜுகேஷன் குவாலிட்டியை சீர் செய்யும் இந்த இயக்கத்தில் சேர்க்கப்பட்டு உள்ளனர்.

டிஎம் சஞ்சய் குமார் அகர்வால் இப்படி கூறினார், "சாதாரணமாக ஒரு அதிகாரி ஓர் ஸ்கூலுக்கு இன்ஸ்பெக்ஷனுக்கு போகும் போது, அவர் செல்வதற்கு முன்பாக பள்ளி நிர்வாகம் உடனடியாக அங்குள்ள நிலைமையை சீர்செய்து விடுகிறது. அதிகாரிகள் வந்து சென்ற பின் அங்குள்ள நிலைமை மறுபடி மோசமாக பழைய நிலைமைக்கு திரும்பி விடும். இப்போது அதிகாரி தினசரி ஸ்கூலுக்கு செல்வதால், அவர்களால் உண்மை நிலைமையை மறைக்க முடியாது.

அதிகாரிகள் எந்த ஸ்கூலுக்கு சென்றாலும் புத்தகங்களின் உள்ள பாடம் மற்றும் மாரல் சைன்ஸ் மட்டுமே சொல்லிக் கொடுக்காமல், அங்குள்ள குறைபாடுகளையும் கவனிப்பார்கள். அவற்றை அகற்றும் உபாயத்தை கையாளுவார்கள். ஒவ்வொரு அதிகாரியும் ஸ்கூல் ரெஜிஸ்ட்டரில் தன் அட்டெண்டென்ஸை பதிவு செய்ய வேண்டும். பிறகு அதிகாரிகளின் செயல்பாடுகளும் கண்காணிக்கப்படும்.

டிஎம் சஞ்சய் குமார் அகர்வால் எடுத்திருக்கும் இந்த முயற்சி கட்டாயமாக பாராட்டுக்குரியது. ●



'தமுக்கு' தண்டபாணி

# சீமைக்கருவேல மரங்களை மண்ட விடாதீர்!

தமிழ்நாட்டில் ஒரு புறம் ஹைட்ரோ கார்பன் திட்டத்துக்கு எதிர்ப்பு வலுத்துக் கொண்டு வருகிறது. மறுபுறம் தமிழ் நாட்டின் பல மாவட்டங்களில் உள்ள சீமைக்கருவேல மரங்களை அகற்றவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதும் கண்டிப்பாக நல்ல விஷயம் தான். காரணம் இந்த சீமைக்கருவேல மரங்கள் என்பது நிலத்தில் உள்ள நீர்ச்சத்து அனைத்தையும் உறிஞ்ச வல்லது. ஒருபுறம் இந்த மரங்களை விவசாயிகள் தங்கள் புஞ்செய் நிலங்களில் மானாவாரியாக வளர விட்டு விட்டு, பிறகு இவற்றை விறகாக விற்று பணம் பார்த்து வருகின்றனர். ஆனால் இப்படியே இந்த சீமைக்கருவேல மரங்கள் வயல்வெளிகளை ஆக்கிரமித்தபடி இருந்தால், வருங்காலத்தில் நம் சந்ததியினருக்கு நீர்வலம் என்பதே இல்லாமல் போய் விடும் அல்லவா?

**வைகோ போட்ட வழக்கு**

2015-ல் மதிமுக பொதுச்செயலாளரான வைகோ, மதுரை ஹைகோர்ட்டில் தமிழகத்தில் உள்ள சீமைக்கருவேல மரங்களை வேரோடு அகற்ற வேண்டும் என்று வழக்கு தொடுத்ததோடு, தாமே அதில் வாதாடவும் செய்தார். இதே போல் மதுரை மாநாகராட்சி முன்னாள் மேயர் பட்டுராஜன் மற்றும் திண்டுக்கல், புதுக்கோட்டை மாவட்டங்களைச் சேர்ந்த பலரும், அந்தந்த மாவட்டங்களில் உள்ள சீமைக்கருவேல மரங்களை அகற்ற கோரி வழக்கு போட்டனர். கடந்த டிசம்பர் மாதம் வைகோ போட்ட இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள், "மதுரை ஹைகோர்ட் எல்லைக்கு உட்பட்ட 13 மாவட்டங்களில் சீமைக்கருவேல மரங்களை ஒரு மாதத்திற்குள் அகற்ற வேண்டும் என்றும், அது குறித்த அறிக்கையை அந்தந்த கலெக்டர்கள் தாக்கல் செய்ய வேண்டும்." என்றும் உத்தரவிட்டனர். மதுரை மட்டுமல்லாமல், சிவகங்கை மாவட்டங்களிலும் இந்த சீமைக்கருவேல மரங்கள் அகற்றப்பட்டு உள்ளனவா என்பதை அறிய, மதுரை ஹைகோர்ட் நிர்வாக நீதிபதிகள் சிலர் தாங்களே நேரில் சென்று ஆய்வு செய்தனர். ஆனால் அந்த பணிகள் நடக்கவில்லை என தெரிந்ததும், இந்த வழக்கை மீண்டும் விசாரணைக்கு எடுத்தனர். பிறகு தான் நீதிபதிகள், இந்த மரங்களை வளர்க்க தடை மற்றும் தண்டனை வழங்கும் தனி சட்டத்தை இரண்டு மாதங்களில் தமிழக அரசு இயற்ற வேண்டும் என்றும், தமிழகத்தின் பிற மாவட்டங்களிலும் அதாவது, தமிழகம் முழுவதும் உள்ள சீமைக்கருவேல மரங்களை 15 நாட்களுக்குள் அகற்ற வேண்டும் என்றும் உத்தரவிட்டனர். இதனால் தமிழகத்தின் பல மாவட்டங்களில் உள்ள சீமைக்கருவேல மரங்கள் சீறிய முறையில் அகற்றப்பட்டு வருகின்றன. குறிப்பாக சிவகங்கை, ராமநாதபுரம் போன்ற பல இடங்களில் இந்த மரங்கள் அகற்றப்பட்டு வருகின்றன.

இந்த சீமைக்கருவேல மரங்களுக்குப் பதிலாக பூவரச மரம் போன்றவற்றை நட்டு வைத்தால், அவை எந்த புயலையும் தாங்கக் கூடியதாகவும், மழை மேகங்களை வரவழைத்து மழை தரக்கூடியதாகவும், சுட்டெரிக்கும் வெயிலுக்கு நிழல் தருபவையாகவும், பல மருத்துவ பயன்களை தருவதாகவும் இருக்கும். மாறாக இனியும் நாம் நம்முடைய நஞ்செய், புஞ்செய் நிலங்களில் இப்படி சீமைக்கருவேல மரங்களை மண்ட விடக் கூடாது. ●



# 2017 ஸ்ரீதேவியின் மகள் இந்த

**நம் கோலிவுட்டில் தான் நடிகர், நடிகைகளின் வாரிசுகள் பலர் அறிமுகமாகி வருகின்றனர் என்றால், பாலிவுட்டிலும் இதே நிலை உள்ளது. இந்த ஆண்டு அங்கு அறிமுகமாக உள்ள சிலர்....**



சாரா அலி கான்



முஸ்தபா

## முஸ்தபா

பிரபல டைரக்டர் அப்பாஸ் மஸ்தானின் மகனான இவர் இந்த ஆண்டு 'மெஷின்' படத்தின் மூலம் பாலிவுட்டில் அறிமுகமாக இருக்கிறார். இம்மாதம் ரிலீசாக உள்ள இந்த படத்தில் இவருக்கு ஜோடி கியாரா அத்வானி ஆகும்.

## சாரா அலி கான்

சைஃப் அலி கான் மற்றும் அமிர்தா

'மும்பையிலிருந்து' மோகினி

சிங்கின் மகளான இவர் இந்த ஆண்டு பாலிவுட்டில் ஹீரோயினாக அதுவும் ஷாருக் கானின் மகனான ஆர்யன் கானுடன் நடிக்க இருக்கிறார் என பேச்சுக்கள் அடிபடுகின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளாகவே பாலிவுட்டில் களம் இறங்க இருக்கிறார் என்ற சேதிகளும் பேசப்பட்டன. இந்த நிலையில் இவர் ஷாருக் கானின் மகனுடன் ஜோடியாக ஒரு படத்தில் நடிக்க இருக்கிறார் என்பது இன்னும் ஹைலைட் ஆக பார்க்கப்படுகிறது.

## அதார் ஜெயின்

ராஜ்கபூரின் மகள் வயிற்று பேரனான இவர் யஷ்ராஜ் பிலிம்ஸ் பேனரில், ஹபீப் பைஃசலின் இயக்கத்தில் இன்னும் பெயரிடப்படாத ஒரு படத்தில் நடிக்க இருக்கிறார். டெல்லியை சேர்ந்த அன்யா சிங் இந்த

ஆர்யன் கான்



# ஆண்டாவது ஹீரோயின் ஆவாரா?

படத்தின் ஹீரோயின் என்று கூறப்படுகிறது. முன்பு இந்த படத்தில் ஒரு பாகிஸ்தானிய நடிகர் நடிக்க இருப்பதாக கூறப்பட்டது. ஆனால் அதற்கு எதிர்ப்பு கிளம்பியதால் அதாருக்கு அடித்திருக்கிறது லக்.




VADIVEL

### அஹான் ஷெட்டி

சுனில் ஷெட்டியின் மகளான அதியா ஷெட்டி சல்மானுடன் 'ஹீரோ' என்ற படத்தில் நடித்திருக்கிறார். இந்த நிலையில் சுனில் ஷெட்டியின் மகனான அஹான் ஷெட்டி பிரபல டைரக்டரான சாஜித் நாடியா வாலாவின் ஒரு படத்தில் ஹீரோவாக நடிக்க இருக்கிறார். ஜுலை 2017-ல் இதற்கான வேலைகள் தொடங்க உள்ளன.




### ஆர்யன் கான்

ஷாரூக் கான் மற்றும் கவுரி கானின் மகனான ஆர்யன் கான் பிரபல பிலிம் டைரக்டரான கரண் ஜௌஹரின் ஒரு படத்தில் கதாநாயகனாக நடிப்பில் களம் இறங்க இருக்கிறார். இதில் சைஃப் அலி கான் மற்றும் அமிர்தா சிங்கின் மகளான சாரா அலி கான் தான் ஹீரோயின்.

லாஸ் ஏஞ்சல்ஸில் படிப்பை முடித்து விட்டு வந்துள்ளார் ஆர்யன் கான் என்பது குறிப்பிடத்தக்கது. இன்ஸ்டாகிராமில் இவரது இமேஜை கெடுக்கும் விதத்தில சில பார்ட்டி போட்டோக்கள் கூட வந்துள்ளன.



ஜான்வி கபூர்

### ஜான்வி கபூர்

ஸ்ரீதேவி மற்றும் போனி கபூரின் மகளான ஜான்வி கபூர் இந்த ஆண்டு கண்டிப்பாக பாலிவுட்டின் ஹீரோயினாக நடித்து விடுவார் என்று கூறப்படுகிறது. ஸ்ரீதேவியின் சொந்த பேனர் படத்தில் இவர் நடிக்க இருக்கிறார். ஜான்விக்கும் ஷிகர் என்பவருக்கும் காதல் என்று கூறப்படுகிறது.

### ரவீனா தௌராணி

டிப்ஸ் கம்பெனியின் உரிமையாளரான ரமேஷ் தௌராணியின் மகளான இவர் 'இஷ்க்விஷ்க்' படத்தின் இரண்டாம் பாகத்தில் ஹீரோயினாக நடிக்க இருக்கிறார். ●





# விஷால் என்ற பெயரில் ஒரு இசையமைப்பாளர்!

**ஏற்கனவே** கோலிவுட்டில் நடிகர் விஷால், விஷ்ணு விஷால் என விஷால் என்ற பெயரில் பலர் உள்ளனர். இந்த நிலையில் அடுத்து இதே பெயருடன் ஒரு இசையமைப்பாளர் வந்து விட்டார்.

அருண் விஜய், மகிமா நம்பியார், தம்பி ராமையா மற்றும் பலர் நடிப்பில் வெளியான 'குற்றம் 23' என்ற படத்தின் இசையமைப்பாளர் தான் இந்த விஷால் சந்திரசேகர் ஆவார். சமீபத்தில் கோலிவுட்டில் த்ரில்லர் படங்களுக்கு அதிக வரவேற்பு உள்ளது. அந்த வரிசையில் சேர்ந்துள்ள 'குற்றம் 23' படத்துக்கு விஷால் சந்திரசேகரின் இசையமைப்பும் பக்கபலமாக இருந்தது குறிப்பிடத்தக்கது. அதிலும் குறிப்பாக 'பொறி வைத்து....' என்ற பாடலுக்கு மட்டுமே ஒரு தனித்துவமான சிறப்பு உள்ளது. காரணம் ஒரு போலீஸ்காரரின் மற்றொரு மென்மையான பக்கத்தை பிரதிபலிக்கும் பாடல் தான் அது.

# ஹிட்டான 'ப்ரோ' பாடல்!





**'பிரதர்'** என்றாலே வேறு அர்த்தம் என்று, ஒரு தமிழ் படம் கூறிய நிலையில், 'ப்ரோ' என்ற வார்த்தைக்கு சரியான அர்த்தத்தை கற்பித்தவர் என்றால், அது சந்தானம் தான். இந்த நிலையில் சந்தானம், வைபவி ஷண்டிலியா மற்றும் பலர் நடித்துள்ள 'சர்வர் சுந்தரம்' படத்தில் வரும் 'ப்ரோ.....' என்ற பாடல் வெளியிடப்பட்ட சில நாட்களிலேயே ரசிகர்களின் பலத்த பாராட்டுக்களை பெற்று விட்டது. இந்த படத்தில் பிரபல செஃப் வெங்கடேஷ் பட் நடித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

# ‘அப்பா’ படத்தில் நடித்த நஷாத்துக்கு பிறந்த நாள்!

‘அப்பா’ படத்தில் சமுத்திரகனியுடன் நடித்திருந்த நஷாத், சமீபத்தில் தனது பிறந்த நாளை ‘தொண்டன்’ படக்குழுவினரோடு கொண்டாடினார். ‘அப்பா’ படத்தில் நடித்திருந்த லிட்டில் ஸ்டார் ஆன நஷாத்தின் நடிப்பு பெரிதும் பாராட்டப்பட்டது. அதிலும் குறிப்பாக தனக்கு படிக்க வரவில்லை என்றாலும், நன்கு கவிதை எழுத வரும் என்பதை அவன் ஒரு மேடையில் குறிப்பிடும் காட்சி பலராலும் பெரிதாக பேசப்பட்டது.

சமுத்திரகனிக்கு மிகவும் பெட் ஆகி விட்ட நஷாத், அடுத்து விக்ராந்த், சமுத்திரகனி மற்றும் பலர் நடிக்கும் ‘தொண்டன்’ படத்தில் நடித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த பிறந்த நாள் கொண்டாட்டத்தில் விக்ராந்த், படவா கோபி மற்றும் பலர் கலந்து கொண்டு, நஷாத்தை வாழ்த்தினர்.





# ஹீரோவாகி விட்டார் விஜய் யேசுதாஸ்!

**விஜய்** யேசுதாஸ் ஹீரோவாக அறிமுகமாகும் படம் ‘படைவீரன்’. தேனி மாவட்டத்தில் உயிர்ப்போடு வாழும் ஒரு கிராமமும், அதன் மண் சார்ந்த மனிதர்களின் வாழ்க்கையையும் அடிப்படையாகக் கொண்ட கதையை களமாக கொண்டது ‘படைவீரன்’ படம்.

அமிர்தா என்ற புதுமுகம் இந்த படத்தில் கதாநாயகியாக நடிக்கிறார். மேலும் இந்த படத்தில் பாரதிராஜா முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார். இவர்களுடன் ‘கல்லூரி’ அகில், கலையரசன், ‘பிச்சைக்காரன்’ சுரேஷ் யேகா, திண்டுக்கல் அலெக்ஸ் உட்பட பலர் நடிக்கின்றனர். ‘கடல்’, ‘ஓ காதல் கண்மணி’ போன்ற படங்களின் டைரக்டர் மணிரத்னத்திடம் உதவியாளராக பணிபுரிந்த தனா இப்படத்தை இயக்குகிறார். கார்த்திக் ராஜா இசையமைக்கும் இப்படத்துக்கு, ஒளிப்பதிவு ‘காஞ்சனா-2’, ‘நெடுஞ்சாலை’ போன்ற படங்களுக்கு கேமரா மேனாக விளங்கிய ராஜவேல் மோகன் ஆகும். ●



# பான் மசாலா விளம்பரங்களும்! சினிமா நட்சத்திரங்களும்!

க.சைலஜா

ஒவ்வொரு துளியிலும் குங்குமப்பூவின் குணம்: அஜய் தேவ்கன்.

இதை சாப்பிட்டால் இன்னும் நெருக்கம் வரலாம்: ஷாருக் கான்.

வெற்றிக்கான அடையாளம் இது: சைஃப் அலிகான்.

உங்களைப் போல ரசிகர்களுக்கு என் அன்பு காணிக்கை: மனோஜ் பாஜ்பேயி.

சாப்பிட்டவர் அனைவரும் அதற்கு அடிமையாகி விடுவர்: அஸ்ராணி.

பாலிவுட்டை சேர்ந்த பல பெரிய திரை நட்சத்திரங்கள் மீடியாவில் இப்படி விளம்பரங்கள் மூலமாக புதிய சுவையை பற்றி புகழ் பாடி மக்களை பான் மசாலா சாப்பிடும்படி சொல்கின்றனர்.

நாட்டின் மிகப் பெரிய உச்ச நீதிமன்றம் மூலமாக குட்கா, மீது தடை போடப்பட்ட பின், பான் மசாலா தயாரிக்கும் பல பெரிய நிறுவனங்களின் தொழில் மந்தமாகி விட்டது. இப்படிப்பட்ட நிலையில் இந்த நிறுவனங்கள் ஒரு பெரிய பாக்கெட்டில் பான் மசாலா மற்றும் அதனுடன் சிறிய பாக்கெட்டில் புகையிலை விற்கத் துவங்கி விட்டனர்.

பான் மசாலா விற்பனை செய்யும் நிறுவனங்கள் மேலும் அதிக பணம் சம்பாதிப்பதற்காக பாலிவுட்டின் பெரிய நடிகர்களை, தன்னுடைய கம்பெனியின் பிராண்டு அம்பாசிடராக்கி, அவர்கள் மூலமாக விளம்பரம் செய்யத் துவங்கி விட்டனர்.

நாட்டின் முக்கால்வாசி இளைஞர்கள் சினிமா நட்சத்திரங்களையே தனது ரோல் மாடலாக வைத்துள்ளனர். இப்படிப்பட்ட நிலையில் திரை நட்சத்திரங்கள் மூலமாக பான் மசாலாவை விளம்பரப்படுத்துவதை கண்டு விரைவாக அதை நோக்கி கவரப்படுகின்றனர்.

ஒரு ஹெல்த் சர்வேயின் கருத்துப்படி, 'நாட்டின் 35 சதவிகித ஜனத்தொகை பான் மசாலா சாப்பிடுகிறது. இன்று பான் மசாலா தொழில் 10 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் மேலாக உள்ளது.' எனத் தெரிய வந்ததுள்ளது. இந்த சர்வேயின் கூற்றுப்படி, 'பான் மசாலா சாப்பிடுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது போலவே, மவுத் கேன்சரின் எண்ணிக்கையும் நாட்டில் வெகுவேகமாக உயர்ந்து வருகிறது. மவுத் அல்லது வாய்/ தொண்டை கேன்சரின் மிகப் பெரிய மற்றும் முக்கியமான காரணம் பான் மசாலா மிக அதிகமாக சாப்பிடுவதே என்பது நிபுணர்களின் கருத்து. இப்படி இதன் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு போனால், மிக சீக்கிரமே மவுத் கேன்சரின் எண்ணிக்கை இந்தியாவில் மற்ற நாடுகளை காட்டிலும் அதிகமாகி விடும்.' என்பது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

பான் மசாலா சாப்பிடும் சில இளைஞர்களிடம் இதை சாப்பிடுவதற்கான காரணத்தை கேட்டோம். அதற்குப் பதிலாக அவர்கள் கூறியது, "சூப்பர் ஸ்டார்கள் எல்லாம் இதை சாப்பிடலாம் என்றால், நாங்கள் ஏன் சாப்பிடக் கூடாது?"

சமூக ஆர்வலர் மற்றும் மனோதத்துவ நிபுணர் ஆன யுவராஜ் இப்படி கூறுகிறார், "இன்றைய இளம் தலைமுறையினர் பாலிவுட் கலைஞர்களை தனது ரோல் மாடலாக கருதுகின்றனர். அவர்களுடைய ரோல் மாடல் ஒரு பொருளை பாராட்டினால், அது அவர்களுக்கும் பிடித்தமானதாக மாறி விடுகிறது. அதை வாங்கத் துவங்குகிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் ரோல் மாடல் பான் மசாலாவை புகழ்ந்து பேசுவதும் அவர்களுக்கு பிடிக்கிறது. பிறகு தன் ரோல் மாடலுடைய விருப்பத்தை தன் விருப்பமாக்கிக் கொள்ள அவர்கள் தயங்குவதில்லை."

சமூக சேவகரும் டாக்டருமான குப்தா கூறுகிறார், "திரை நட்சத்திரங்கள் பான் மசாலாவை விளம்பரப்படுத்துவதால், நாட்டின் இளைஞர்கள் வெகுவாக இதை விரும்புகிறார்கள். திரைப்பட கலைஞர்களுக்கும் சமுதாயத்தின் நலனைப் பற்றி யோசிக்கும் பொறுப்பும், கடமையும் உள்ளது. இளம் சமுதாயம் அவர்களால் கெடுவதை தடுக்க வேண்டும். எனவே இத்தகைய விளம்பரங்களில் அவர்கள் நடிப்பதை தவிர்க்க வேண்டும்."

இளைஞர்களை கவரும் இத்தகைய பெருட்களின் விளம்பரங்கள்



VADIVEL

# கோவை தொழிலதிபரின் கதையை படமாக்கும் அக்ஷய் குமார்!



'மும்பையிலிருந்து' மோகினி

ஹீரோ அக்ஷய் குமார் மிகவும் உற்சாகமாக கேப்டவுனிலிருந்து 2017-ன் முதல் நாள், தன் ரசிகர்களுக்காக புது வருட ட்ரீட் என தன் படத்தின் போஸ்டரை டுவிட்டரில் ரிலீஸ் செய்தார். ஆனால் சிறிது நேரத்திலேயே அக்ஷய் குமாரின் ஸ்போக்ஸ் பெர்சனின் இமெயில் வந்தது, "அந்த செய்தியில் ஏதோ தவறுள்ளது. அதனால் அதை பிரசுரிக்க வேண்டாம் என்று."

பிறகு ரகசியம் வெளிப்பட்டது. அது என்னவென்றால், அக்ஷய் குமாரின் இரு படங்களான 'பேட்மேன்' மற்றும் 'டாய்லெட்: ஏக் பிரேம் கதா' ஆகியவை திருட்டுக் கதை என்ற குற்றச்சாட்டு வெளிவந்துள்ளதாக செய்தி வெளியானது.

**பிரச்சனை 'பேட்மேன்' பற்றியது**

அக்ஷய் குமார் மனைவியான டிவிங்கிள் கன்னா 'பேட்மேன்' எனும் ஒரு திரைப்படத்தை தயாரிக்கிறார். இதை ஆர்.பால்கி இயக்க இருக்கிறார். அக்ஷய் குமார், அமிதாப் பச்சன், ராதிகா ஆப்தே, சோனம் கபூர் மற்றும் பலர் நடிக்கும் இந்த படத்தின் ஷூட்டிங் மத்திய பிரதேசத்தின் மஹேஷ்வரில், நர்மதா நதிகரையோரம் மற்றும் போபாலில் நடக்க இருக்கிறது.

அக்ஷய் குமார் டுவிட்டரில் வெளியிட்டிருக்கும் போஸ்டரில் எழுதியுள்ள வாசகம் 'பேட்மேன்: பெஸ்ட் ஆன் என் எக்ஸ்ட்ரா ஆர்டினரி ஸ்டோரி.' படத்தின் போஸ்டரில் பெயர் கூடவே, சானிடரி நாப்கின் படமும் இருந்தது. ஆம்,




'பேட்மேன்'-ன் கதை கோயம்புத்தூரின் ஒரு தொழிலதிபரான அருணாச்சலம் முருகானந்தத்தின் வாழ்க்கை வரலாறு ஆகும்.

இந்த கதை சமுதாயத்தை சேர்ந்த ஒரு நல்ல மனித நேயமுள்ள மனிதரை பற்றியது. இவர் கீழ்தட்டு பெண்களின் ஆரோக்கியத்தை முன்னிட்டு அவர்களுக்கு குறைவான விலையில் சானிடரி நேப்கின் கிடைக்க வழி செய்கிறார்.

**யார் அந்த முருகானந்தம்?**

2016-ல் 'பத்மஸ்ரீ' விருது பெற்ற அருணாச்சலம் முருகானந்தம் தன் மனைவியின் கஷ்டத்தை கண்டு, சானிடரி நேப்கின் தயாரிக்கும் ஒரு விலை



குறைவான மெஷினை உருவாக்கியதுடன், கிராமம் கிராமமாக சென்று அதுக்கு விளம்பரமும் செய்தார். விளைவாக இந்தியாவின் 29 மாநிலங்களில் 23 மாநிலங்களில் இப்போது சானிடரி நேப்கின் தயாரிக்கும் இப்படிப்பட்ட மெஷின்கள் பெருகிவிட்டன.

மார்க்கெட்டில் கிடைக்கும் சானிடரி நேப்கின்களை ஒப்பிடும் போது, திரு.அருணாச்சலம் முருகானந்தம் தயாரிக்கும் சானிடரி நேப்கின்களை தயாரிக்க மிகவும் குறைவான முதலீடு செய்தாலே போதுமானது என்பது குறிப்பிடத்தக்கது.

'அக்ஷய் குமாரும், ட்விங்கிள் கன்னாவும் நல்ல விஷயம் தானே செய்கின்றனர்.' என உங்களுக்கு தோன்றலாம். ஆனால் அருணாச்சலம் முருகானந்தனின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட கதையை ஏற்கனவே டைரக்டர் அமித் ராய் 'ஐபேட்' என்ற பெயரில் படமாக்கியுள்ளார். ஆனால் சில பிரச்சனை காரணமாக இன்னமும் இது ரிலீஸ் ஆகவில்லை. இந்த மாதம் இது ரிலீஸ் ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அக்ஷய் குமாரின் படமான 'பேட்மேன்' மட்டுமின்றி அவருடைய மற்றொரு படமான 'டாய்லெட்: ஏக் பிரேம் கதா' கூட பிரச்சனையில் சிக்கி சர்ச்சைக்கு உள்ளானது.

எடிட்டரிலிருந்து டைரக்டராக மாறியுள்ள ஸ்ரீநாராயண் சிங்கின் முதல் திரைப்படமான 'டாய்லெட்: ஏக் பிரேம் கதா'-வில் அக்ஷய் குமார் மற்றும் பூமி பேட்கேகர் ஜோடியாக நடித்துள்ளனர். பூமி பேட்கேகர் 'சுவச் பாரத் அபியானை' ஆதரிப்பவர் ஆவார் என்பது குறிப்பிடத்தக்கது. ●

## கடுதாசி



நடிகர் திலகத்தின் வீட்டிலிருந்து வந்த வாரிசு நடிகரான விக்ரம் பிரபு பற்றி கவர் ஸ்டோரி படிக்க படிக்க வியப்பாக இருந்தது. காரணம் அவர் பெரிய வீட்டில் பிறந்தாலும், சினிமா வேலைகளை முறையே கற்று பெரிய ஆளாக வந்திருப்பது தான். மேலும் அவரிடம் உள்ள பணிவும் பாராட்டத்தக்கதே. 'வண்ணத்சிதறல்' பகுதி பெயருக்கு ஏற்ப மனதில் வண்ணங்களை வாரிக் குவித்தது. அட்டை படமும் அட்டகாசம்.

- க.நீதி, திருப்பத்தூர்.

●

சினிமா பாட்டு புத்தகம் பற்றிய அலசல் கட்டுரை அற்புதம். காரணம் என்ன தான் நாம் யூடியூபில் ஒரு சினிமா பாட்டின் வரிகளை பார்த்தாலும், அவற்றை அச்சில் வார்த்த புத்தகங்களை கொண்டு படிக்கும் போது அவை நம் மனதுடன் நேரடியாக பேசுவது போல இருக்கிறதே.

வட்டார செய்திகள் தாங்கி வந்த செய்தி கட்டுரைகள் அனைத்தும், பக் பக் ரகம். 'நம் நாட்டில் க்ரைம் எண்ணிக்கை எப்போது தான் குறையுமோ.' என்ற அங்கலாய்ப்பை உருவாக்கியது அத்தனை செய்தி கட்டுரைகளும். 'சாரல் டாக்கீஸ்' பகுதியில் வெளியான சினிமா துணுக்குகள் அனைத்தும் அருமை.

- ப.சந்திரன், சேலம்.

●

கதைகள் அனைத்தின் படங்களும் விகாரமாய், வக்கிரமாய் இருந்தாலும், அதில் சில நல்லவற்றை எடுத்துக் கூறுவது தான் என்பதே உங்கள் ஹைலைட். எப்போதும் போல 'மிஸ்.மின்னல்' மின்னலை போல சில வரிகளிலேயே தான் சொல்வதை கூறினாலும், மின்னலை போல கீற்றாக சிரிப்பு அலைகளை உருவாக்கி விடுகிறார். இப்படி சாரல் அனைத்தும் விஷயங்களும் கலந்து சாரலாக அடித்து எங்கள் மனதை குளிர்விக்கிறது. இதில் 'நெத்தியடி' போன்ற நச் நச் ரகம்.

-ம.இஸ்மாயில், ஆம்பூர்.

●

நம் தென்மாநிலத்தில் நடக்கும் செய்திகளுடன், வடமாநிலத்தில் நடக்கும் சில அதிரடி செய்திகளையும் சாரல் தாங்கி வருவதால், "எங்களால் இந்தியாவின் அனைத்து பகுதிகளிலும் நடக்கும் விஷயங்களை தெரிந்து கொள்ள முடிகிறது." என்று தான் கூற வேண்டும். 7 கதைகள் என்பன ஏதாவது ஒரு நல்ல விஷயத்தை எடுத்துரைத்தன. ஆனால் படங்கள் தான் நன்றாக இல்லை.

- ர.டேவிட், வல்லம். ●

முகவரி: ஆசிரியர், சரஸ் சாரல், 2/92 சிசன்ஸ் காம்ப்ளக்ஸ் முதல் தளம், மாண்டியத் சாலை, சென்னை-8.
இமெயில்: grihshobha.chennai@delhipress.biz